மலர்-2 இதழ்-38 மார்ச் 16-31 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

மாதமிருமுறை

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



## துர்மரண ஆத்மாக்களை வழிபடலாமா?

## விபத்துகளிலிருந்து காக்கும்

# பாடிகாட் முனீஸ்வரர்

# தொழில் - வாழ்க்கையில் வெற்றியைத் தரும் நட்சத்திர குறியீடு

அவரவர் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய வடிவங்களை தினமும் பார்த்து வந்தாலோ அல்லது பயன்படுத்தி வந்தாலோ வாழ்க்கையில் எளிதில் வெற்றியடையலாம்.

ராமன் தன் ஜென்ம நட்சத்திர குறியீடான வில்லேந்தி ராவணனை வென்றான்.

கிருஷ்ணன் தன் ஜென்ம நட்சத்திர குறியீடான தேரை ஓட்டி பாண்டவர்களுக்கு வெற்றி தேடி தந்தான்.

நட்சத்திரவடிவம்:

| | |
|---|---|
| அஸ்வினி | குதிரைத்தலை |
| பரணி | யோனி, அடுப்பு, முக்கோணம் |
| கிருத்திகை | கத்தி, கற்றை, வாள், தீஜ்வாலை |
| ரோஹிணி | தேர், வண்டி, கோயில், ஆலமரம், ஊற்றால், சகடம் |
| மிருகசீரிடம் | மான்தலை, தேங்கைக்கண் |
| திருவாதிரை | மனிததலை, வைரம், கண்ணீர்துளி |
| புனர்பூசம் | வில் |
| பூசம் | புடலம்பூ, அம்புக்கூடு, பசுவின்மடி |
| ஆயில்யம் | சர்ப்பம், அம்மி |
| மகம் | வீடு, பல்லக்கு, நுகம் |
| பூரம் | கட்டில்கால், கண்கள், அத்திமரம், சதுரம், மெத்தை |
| உத்திரம் | கட்டில்கால், கம்பு, குச்சி, மெத்தை |
| ஹஸ்தம் | கை |
| சித்திரை | முத்து, புலிக்கண் |
| ஸ்வாதி | பவளம், தீபம் |
| விசாகம் | முறம், தோரணம், குயவன்சக்கரம் |
| அனுசம் | குடை, முடப்பனை, தாமரை, வில்வளசல் |
| கேட்டை | குடை, குண்டலம், ஈட்டி |
| மூலம் | அங்குசம், சிங்கத்தின்வால், பொற்காளம், யானையின்துதிக்கை |
| பூராடம் | கட்டில்கால் |
| உத்திராடம் | கட்டில்கால் |
| திருவோணம் | முழக்கோல், மூன்றுபாதச்சுவடு, அம்பு |
| அவிட்டம் | மிருதங்கம், உடுக்கை |
| சதயம் | பூங்கொத்து, மூலிகைகொத்து |
| பூரட்டாதி | கட்டில்கால் |
| உத்திரட்டாதி | கட்டில்கால் |
| ரேவதி | மீன், படகு. |



வெற்றிதரும் நட்சத்திர குறியீடுகள்:

ஜோதிட சாஸ்திரத்தில் இருபத்தியேழு நட்சத்திரங்களுக்கும் உருவம் அல்லது குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளை நாம் வெற்றி சின்னங்களாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். எப்படியென்றால், நாம் வசிக்கும் வீடு,பணிபுரியும் இடம்,அணியும் ஆடை, அறிமுக முகவரி அட்டை (visiting card), கடித முகவரி ஏடு (Letter pad) இவைகளில் அவரவர் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய உருவத்தை சின்னங்களாக பயன்படுத்திவந்தால் வாழ்க்கையில் எளிதில் வெற்றி பெறலாம். புராண இதிஹாசங்களில் இதற்கு ஆதாரம் இருப்பதை அறியலாம்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் ஜென்ம நட்சத்திரம் ரோஹிணியாகும். ரோஹிணி நட்சத்திரத்தின் உருவம் தேராகும். ஸ்ரீகிருஷ்ணர் தேரோட்டியாக இருந்து பாண்டவர்களுக்கு மஹாபாரதப்போரில் வெற்றி தேடித்தந்தார். பகவான் ஸ்ரீராமரின் ஜென்ம நட்சத்திரம் புனர்பூசமாகும். புனர்பூசம் நட்சத்திரத்தின் உருவம் வில்லாகும். ஸ்ரீராமர் வில்லேந்தி ராவணனை வெற்றி கொண்டார்.

பகவான் ஸ்ரீவாமனரின் ஜென்ம நட்சத்திரம் திருவோணமாகும். திருவோணம் நட்சத்திரத்தின் உருவம் மூன்று பாதச்சுவடுகள் என கூறப்படுகிறது. ஸ்ரீவாமனர் ஈரேழு உலகையும் ஈரடியாய் அளந்து மூன்றாவது அடியை மஹாபலி சக்கரவர்த்தியின் தலையில் வைத்து அவன் கர்வத்தை அடக்கினார். எனவே ஸ்ரீவாமனருக்கு உலகளந்த பெருமாள் என்னும் நாமம் உண்டு.

ஸ்ரீஅனுமனின் ஜென்ம நட்சத்திரம் மூலமாகும். மூலம் நட்சத்திரத்தின் உருவம் சிங்கத்தின் வால் என ஜோதிட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.அனுமன் கையிலிருக்கும் ஆயுதம் சிங்கத்தின் வால் போன்ற வடிவத்தில்தான் இருக்கும்.

ஸ்ரீருத்திரனின் ஜென்ம நட்சத்திரம் திருவாதிரையாகும். திருவாதிரை நட்சத்திரத் தின் உருவம் மண்டையோடு என ஜோதிட நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீருத்திரன் மண்டையோடுகளை மாலையாக அணிந்திருப்பவன்.

மேற்கண்ட புராண, இதிஹாச தகவல்களின் மூலமாக நாம் அறிந்துகொள்வது என்னவென்றால் நட்சத்திர உருவங்கள் அல்லது சின்னங்கள் நமக்கு வெற்றிதரும் சின்னங்களாகும். அவரவர் ஜென்ம நட்சத்திரத்திற்குரிய உருவத்தை, தன்னோடு வைத்திருந்தால் வாழ்க்கையில் எளிதில் வெற்றி பெறலாம்.

# ஆசாரத்தை காட்டிலும், பக்தியே பிரதானம்



ராகவேந்திரர் ஆன்மிக பயணமாக ஒவ்வொரு ஊராக சென்று கொண்டிருந்தார். ஒரு முறை அவர் மாளவி என்ற ஊரில் தங்கியிருந்தபோது மூலராமருக்கான பூஜைகளை முடித்து விட்டு ஓய்வாக இருந்தார். ராகவேந்திரர் ஓய்வாக இருக்கும்போது நூல்கள் எழுதும் பணியில் ஈடுபடுவார். அவ்வாறு அங்குள்ள கோவிலில் அமர்ந்து அவர் நூல் ஒன்றை எழுதிக் கொண்டிருந்தார்.

அவ்வேளையில் அந்த ஊரைச் சேர்ந்த வாலிபன் ஒருவன், ராகவேந்திரரையும், அவரது பணிகளையும் கவனித்தபடி கோவிலுக்கு வெளியே நின்று கொண்டிருந்தான்.

அவனை பார்த்து விட்டார் ராகவேந்திரர். உடனே அந்த வாலிபனை உள்ளே வரும்படி அழைத்தார்.

அவனோ, நான் தாழ்ந்த குடியைச் சேர்ந்தவன். ஆகையால் எனக்கு கோவிலுக்குள் நுழைய அனுமதி கிடையாது என்று கூறினான்.

இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களில் உயர்வு, தாழ்வு என்பது கிடையாது. நம்மை படைத்த கடவுளின் சன்னதிக்கு வருவதற்கு எவரது அனுமதியும் நமக்குத் தேவையில்லை. ஆகவே நீ தாராளமாக கோவிலுக்குள் வரலாம் என்று கூறினார் ராகவேந்திரர்.

இதையடுத்து கோவிலுக்குள் வந்து தன் காலில் விழுந்து வணங்கிய அந்த இளைஞனை, தூக்கி நிறுத்தி தழுவிக் கொண்டார் ராகவேந்திரர். பிறகு, நான் இங்கு இருக்கும் காலம் வரை மூலராமருக்கு நடத்தப்படும் பூஜைக்கு, உன்னால் முடிந்த பொருட்கள் ஏதாவது கொண்டுவா! என்று கூறினார்.

ஏழையான நம்மால் என்ன தர முடியும் என்று யோசித்தவாறே அந்த இளைஞன் வீட்டிற்கு சென்றான். பூஜைக்கான பொருட்கள் எதுவும் சேகரிக்க முடியாத நிலையில், தன் வீட்டில் சிறிதளவு இருந்த கடுகைக் கொண்டு போய் ராகவேந்திரரிடம் சமர்ப்பித்தான். அதனை அன்புடன் பெற்றுக் கொண்ட அவர், தன் சீடர்களை அழைத்து, அன்றைய உணவில் இந்த கடுகை சேர்க்கும்படி கூறினார்.

கடுகைப் பெற்றுக்கொண்ட சீடர்களுக்கு தயக்கம் ஏற்பட்டது. ஏனெனில் விரத மாதமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த அந்த மாதத்தில் உணவில் கடுகை சேர்க்கக் கூடாது என்ற ஆசார விதி இருந்தது. அதற்காகவே சீடர்கள் தயக்கம் காட்டினர். அதனை ராகவேந்திரரிடமும் தெரிவித்தனர்.

> “உண்மை பக்தியுடன் சமர்ப்பிக்கும் எந்த பொருளையும் இறைவன் மறுப்பதில்லை”

ஆனால் ராகவேந்திரர் கூறிய பதில் சீடர்களின் தயக்கத்தை விரட்டியது. உண்மையான பக்தியுடன் சமர்ப்பிக்கப்படும் எந்த பொருளையும் இறைவன் மறுப்பதில்லை என்பதே அந்த பதில். அதன்பின்னர், சீடர்கள், சமையலில் கடுகை சேர்த்து உணவு சமைத்தனர்.

இந்த நிலையில் ராகவேந்திரரை பார்ப்பதற்காக புலவர் ஒருவர் வந்திருந்தார். அவரை வரவேற்று, அவரது புலமையை பாராட்டிய ராகவேந்திரர், தன்னுடன் உணவருந்தும்படி கேட்டுக் கொண்டார்.

அந்த புலவரும் உணவருந்த அமர்ந்தார். அப்போது பரிமாறப்பட்ட உணவில் கடுகு சேர்க்கப்பட்டிருப்பது கண்டு அவர் முகம் சுளித்தார். ஆஷாட மாதமான விரத காலத்தில் கடுகை உணவில் சேர்ப்பது ஆசாரத்திற்கு எதிரானதே என்று நினைத்தவர், அதனை ராகவேந்திரரிடம் கூறி குறைபட்டுக் கொண்டார்.

இதற்காகவா கவலைப்படுகிறீர்கள்! உங்களுக்கு கடுகு சேர்க்காத உணவு தரச் சொல்கிறேன் என்று கூறி, புலவருக்கு வேறு உணவை அளிக்கச் செய்தார் ராகவேந்திரர். ஆனால் ராகவேந்திரர் கடுகு சேர்க்கப்பட்ட உணவையே உட்கொண்டார். இது புலவருக்கு பெரும் வருத்தத்தை உண்டாக்கியது. உணவு உபசரிப்பு முடிந்து புலவர் ஊருக்கு புறப்படும்போது, மந்திர அட்சதையை கொடுத்து அனுப்பினார் ராகவேந்திரர்.

வீட்டிற்கு சென்றதும் அதனை திறந்து பார்த்த புலவர் அதிர்ச்சியில் உறைந்து போனார். ஏனெனில் ராகவேந்திரர் வழங்கும்போது பொன்னிற மஞ்சள் நிறத்தில் ஜொலித்துக் கொண்டிருந்த அந்த அட்சதையானது, தற்போது கருமையாக மாறிப்போயிருந்தது. மறு கணமே புலவர் புறப்பட்டு விட்டார் ராகவேந்திரரை தேடி. அவரது காலில் விழுந்து கதறி அழுதார். இறைவனுக்கு படைக்கப்பட்ட உணவை நீ மன வெறுப்புடன் உண்ண மறுத்து விட்டாய். அதனால் ஏற்பட்ட விளைவு இது. கடவுள் மீது வைக்கும் நம்பிக்கை முழுமையானதாக இருக்க வேண்டும். அது அரைகுறையாக இருக்கக் கூடாது. மேலும் இறைவனுக்கு ஆசாரத்தை காட்டிலும், பக்தனின் அளவு கடந்த பக்தியே பிரதானம் என்று தெளிவுபடுத்தினார் ராகவேந்திரர்..


ஆன்மிகமலர் மெயில் புக்

# திருமுறைகளின் அற்புதங்கள்

1. வேதங்களால் பூட்டப்பட்ட திருக்கதவு திறந்தது பிறகு திருத்தாளிட்டது
2. பாலை நிலம் நெய்தல் ஆனது
3. பாண்டியன் சுரம் தீர்த்து கூன் நிமிர்த்தியது
4. தேவார ஏடுகளை தீயில் கருகாமல் பச்சை யாக எடுத்தது எதிர் நீச்சல் இடவைத்தது
5. ஆண் பனை பெண் பனையாகியது
6. விஷத்தினால் இறந்த செட்டி உயிர்பெற்றது
7. எலும்பை பெண்ணாக்கியது
8. சுண்ணாம்புக் காளவாயில் 7 நாட்கள் இருந்தும் உயிர் பிழைத்தது
9. மத யானையை வலம் வரச்செய்து வணங்கவைத்தது
10. மானசரோவரில் மூழ்கி திருவையாற்றில் எழுந்தது
11. கல்லை தெப்பமாக கொண்டு கரையேறியது
12. செங்கல்லைப் பொன்னாக்கியது
13. விருதாசலத்தில் மணிமுத்தாற்றில் இட்ட பொன்னை ஆரூர் குளத்தில் எடுத்தது
14. முதலை விழுங்கிய பிள்ளையை மீட்டது
15. காவேரி பிரிந்து வழி விட்டது
16. நரியை குதிரையாக்கியது
17. வெள்ளானையில் கயிலாயம் சென்றது
18. குதிரையை நரியாக்கியது
19. பிறவி ஊமையை பேச வைத்தது
20. பரம்பொருளான சிவபெருமானே எழுதிய பெருமைக்குரியது

இப்படி திருமுறைகளின் அற்புதங்கள் ஏராளம் அதன் பெருமைகளை அளவிட முடியாது திருமுறைகளை நாளும் ஓதுவோம் சிவானுபவம் பெறுவோம்







வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில் இந்து சமயக் கருத்துக்களையும், பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

**ஆன்மிகமலர் டிரஸ்ட்**

Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது. அழகிய வண்ணங்களுடன், கண்ணைக்கவரும் விதத்தில் புத்தம் புதிய பொலிவுடன், அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும் சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும் தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம் உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

**AANMEEGA MALAR TRUST**
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

மேலும் தொடர்பு கொள்ளவும்
8825844033

# விபத்துகளிலிருந்து காப்பாற்றும்

# பாடிகாட் முனீஸ்வரர்

இந்துமதத்தில் பல கடவுள்கள் இருந்தாலும் ஆதியும் அந்தமுமாக விளங்குவது சிவபெருமான்தான். அந்த சிவ ரூபங்களில் பல தெய்வங்கள் அடக்கம். புகழ்பெற்ற சிவரூபங்கள் பல வடிவங்களில் திகழ்ந்தாலும் ஒவ்வொரு ரூபங்களின் வழிபாடு அந்த அந்த பகுதி மக்களின் வாழ்க்கையுடன் ஒன்றியிருக்கும்.

வழிபடும் முறையில் வேறுபாடு ஒவ்வொரு இடத்திற்கு மாறினாலும். கடைசியில் அடைவது சிவத்தை என்பதை மறக்கவும் முடியாது மறுக்கவும் முடியாது.

இதுபோன்ற பகுதிவழிபாடுகள் தமிழகம் மட்டுமின்றி இந்தியாவில் பெரும்பாலான இடங்களில் பின்பற்றப்படுகிறது. அந்த வழிபாட்டை தமிழகத்தில் கிராம தெய்வ வழிபாடு என்று அழைக்கின்றனர். குறிப்பாக கிராம தெய்வ வழிபாட்டை குறிப்பிட்ட கிராமத்தின் தெய்வத்தையே தங்களது குலதெய்வமாக வைத்துக் கொண்டு வழிபாடும் செய்வார்கள்.

குலதெய்வத்துடன் சேர்த்து மற்ற தெய்வங்களை வழிபட்டாலும், வழிபடுபவர்களின் குடும்பத்தில் குலதெய்வம் என்பது தலைமை உறுப்பினராகவே விளங்கும். அந்த குடும்பத்தில் நடைபெறும் அனைத்து சுப நிகழ்சிகளுக்கும், முதன்மையாக குலதெய்வம் என்ற தலைமை உறுப்பினருக்கு முக்கியத்துவம் தந்து, துவங்கும் வழக்கம் தமிழகத்தில் பெரும்பாலும் கடைபிடிக்கப்படும் வழிமுறைகளாகும்.

மனிதர்கள் வாழும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அவர்கள் வாழும் இடத்தில் கிடைக்கும் உணவுகளையும், பழக்கவழக்கங்களையும் மாறாமல் அந்த பழக்கவழக்கத்துடன் இறைவனை இணைத்து செய்யப்படும் வழிபாட்டு முறை, என்றும் இந்த குலதெய்வ வழிபாட்டிற்கு சிறப்பு உண்டு. இந்த குலதெய்வ வழிபாட்டை கடைபிடிக்கும் ஒருகுறிப்பிட்ட சமுதாயமக்கள், சைவமாகவும், அசைவமாகவும் இருந்தாலும், அந்த உணவு முறையை தங்களது தெய்வத்திற்கு படையலிட்டு வழிபடுவார்கள். இந்த வழிபாட்டை மேற்கொண்ட பின் பொதுவாக உள்ள தெய்வ வழிபாட்டையும் கடைபிடிப்பார்கள்.

இதில் துரதிஷ்டவசமாக தங்கள் குலதெய்வம் யார் என்று தெரியாதவர்களும் உண்டு. அவ்வாறானவர்கள் பொதுவான தெய்வவழிபாட்டை மேற்கொள்வது வழக்கம்.

இதுபோன்ற வழிபாட்டு முறையின்படி சில தெய்வங்களுக்கு சக்தி அதிகம் உண்டு, அதுபோன்ற தெய்வங்களை மற்ற குலத்தாரும் வேண்டி வணங்குவார்கள். அந்த வகையில் தோன்றியதுதான் கிராமத்து தெய்வங்கள்.

கருப்பண்ணச்சாமி
ஒண்டிவீரன்
அய்யனார்
சுடலைமாடன்
கருப்புசாமி
மதுரை வீரன்
இடும்பன்








காத்தவராயன்
பேச்சியம்மன்
மதுரை பாண்டி முனிஸ்வரன்
காத்தவராயன்
பதினெட்டாம்படி கருப்பண்ணச்சாமி
ஒண்டிவீரன்

போன்ற இன்னும் பல கிராமத்து தெய்வங்களை ஒருசில குலத்தார் தெய்வமாக இருந்தாலும், பேய், பிசாசுகளை விரட்டுதல், நோய்நொடி தீர்த்தல், குடும்ப பிரச்சனைகளை தீர்த்தல், தொழில் சிறப்பு அடையவைத்தல் போன்ற பல்வேறு பிரச்னைகளை மேற்கண்டதெய்வங்கள் தீர்க்கும் சக்தி வாய்ந்ததால், மற்றவர்களும் இத் தெய்வங்களை வழிபடுகின்றனர்.

அந்த வகையில் மனிதர்களுக்கு ஏற்படும் பயத்தை போக்கும் சக்தியும், தீமைகளை அகற் றும் ஆற்றலும் படைத்த, முனி, முனி யாண்டி, முனியன், முனியப்பர் என பல பெயர் களாலும் அழைத்து வழிபடுவர் முனீசுவரர் ஆவார்.

முனி என்ற சொல் ரிக் வேதத்தில் 'தெய்வ ஆவேசம் படைத்தவர்' என்றும், பயமற்றவர் என்றும் பொருள் கொள்ளப் படுகின்றது. உபநிடதம், பகவத்கீதை என்பவற்றில் உலக வாழ்க்கையை வெறுத்து ஞான வரம்பாகிய மௌனத்தைக் கடைப்பிடித்து பரமதியானத்தில் ஆழ்ந்து தட்பவெப்ப, சுகதுக்கம் தாக்கப்படாமல் விருப்பு வெறுப்பு, கோபதாபம் முதலியவை அறவே நீக்கியவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

கிராம மக்கள் மத்தியில் தவறு செய்தால் தலையில் அடிப்பவர், நம்மோடு ஒரு மனிதராகவே வருவார், வானுக்கும் பூமிக்குமாக ஒளிப்பிழம்பாகக் காட்சி தருபவர் என்று பல வாறு நம்பிக்கைகள் காணப் படுகின்றன.

இவரையே பெரும் பாலான கிராமங்கள் தங்களது எல்லைச்சாமி யாகவும் வழிபடுகின்றனர்.

தமிழகம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலான நாடுகளில் முனீசுவரர் வழிபாடு சிறப்








படைந்து காணப்படுகின்றது.

அந்தவகையில் சென்னையில் மிகவும் பிர சித்தி பெற்றவராக விளங்குபவர் பாடிகாட் முனீசுவரர் ஆவார்.

கடந்த, 1860ம் ஆண்டு, தமிழகத்தில், சென் னையில் தற்போதைய தலைமை செயலக இடத் தில், கோட்டை சாமியாக அருள் பாலித்து வந்தார் முனீஸ்வரன்.

வட ஆற்காடு மாவட்டத்திலிருந்து சென் னைக்கு பிழைக்க வந்தவர்கள் தங்கள் குல தெய்வமான முனீஸ்வரன் சிலையை தங்க ளுடன் கொண்டுவந்து இங்கு பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்துள்ளனர். அதன்பின் சில பல காரணங்களால் 85 ஆண்டுகளுக்கு முன்பு, பல்லவன் பணிமனையின் முன்பக்கம் (சென்ட்ரல் ரயில்நிலையத்தின் எதிரில் உள்ள பாலத்தின் இறக்கத்தில்) பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

அந்த காலகட்டத்தில், பல்லவன் இல்லத்தில் பேருந்துகளுக்கு, "பாடி கட்டும்' வேலைகள் நடந்தன. அதே போல், ரயில் பெட்டிகளுக்கு மேற்கூரை அமைக்கும் பணியும் நடந்து வந்தது. இரண்டு இயந்திர வாகனங்களுக்கும், பாடி கட்டும் இடத்தில் இருந்ததால், முனீஸ்வரனுக்கு, பாடிகாட் முனீஸ்வரன் என்ற பெயருடன் அழைக் கப்பட்டுவந்தார்.

முனிஸ்வரர்களில் இவர் வாகனங்களில் செல்லும்போது வாகனங்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் பாதுகாப்பாக இருந்து எந்தவித விபத்துகளும் ஏற்படாமல் பாதுகாக்கும் சக்தி வாய்த்வர் என்பதாலும், பக்தர்களுக்கு பாடி கார்டாக இருப்பதால் பாடிகாட் முனீஸ்வரன் என்றும் தற்போதைய தலைமுறையினர் உறுதி யாக நம்புகின்றனர்.

சென்னையில், புது வாகனம் வாங்கியோர், ஆர்.டி.ஒ., அலுவலகம் போவதற்கு முன்பாக, பல்லவன் இல்லத்தின் அருகில் உள்ள, பாடிகாட் முனீஸ்வரன் கோவிலுக்குச் செல்வதற்கே முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

புது வாகனம் வாங்கிய பின், இங்கு பூஜை செய்தால், வாகனத்திற்கு விபத்தே ஏற்படாது என்பது, சென்னைவாசிகளின் நம்பிக்கை மட்டு மல்ல. உண்மையுமாகும்.

குழந்தைகளுக்கு எந்தவித தீய சக்திகளின் தொல்லையும் ஏற்படக்கூடாது என்பதற்காக இங்கு மொட்டை அடித்து காது குத்தும் சம்பி ரதாயங்களும், புதுவீடுகட்டும்போது எந்த தடை யும் ஏற்டாமல் இருக்க பொங்கல் வைப் பதும், திருமணம் போன்ற சுபநிகழ்ச்சியில் எந்த தடங்களும் ஏற்படக் கூடாது என்பதற்கான வேண்டுதல்களிலும் சிறப்பு வாய்ந்தது இத்திருக் கோயில். எலுமிச்சையும், சுருட்டும் இவருக்கு உகந்தது. ஒருசிலர் வேண்டுதல்களுக்கு ஏற்ப மதுபானங்களும் படைக்கப்படுகிறது. மொத் தத்தில் சென்னையின் காவல் தெய்வமாகவும் விளங்குபவர் இந்த பாடிகாட் முனீஸ்வரன் ஆவார்.

## மகாலட்சுமி கடாட்சம் கிடைக்க எளிய வழிமுறைகள்...



1. மகாலட்சுமி தாமரைப் பூவில் வாசம் செய்பவள். சித்தி, புத்தி, போகம், முக்தி தருபவள்.
2. மகாலட்சுமிக்கு ஈஸ்வரி, ஹரண்யமயி, ஹரிணி, சூர்யா, பிங்களா, புஷ்கரிணி, சந்திரா என்ற பெயர்களும் உண்டு.
3. லட்சுமிக்கு பிரியமான பூ செவ்வந்தி எனப்படும் சாமந்திப்பூ.
4. நெல்லிமரத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதால் துவாதசியன்று நெல்லிக்கனியை உணவில் சேர்த்துக் கொண்டால் ஏகாதசி விரதத்தின் பலன் கிடைக்கும்.
5. ஆதி சங்கரருக்கு துவாதசியன்று நெல்லிக்கனி தானம் செய்த பெண்மணிக்கு அவர் கனகதாரா ஸ்தோத்திரம் பாடி லட்சுமி அருளால் பெருஞ்செல்வம் கிடைக்கச் செய்தார்.
6. மகாலட்சுமி வில்வ மரத்தில் இருப்பதால் மாதப்பிறப்பு, அமா வாசை, பவுர்ணமி, சதுர்த்தி, அஷ்டமி, நவமி, திங்கட்கிழமை ஆகிய நாட்களில் வில்வத்தை மரத்திலிருந்து பறிக்கக் கூடாது.
7. பசுவின் பின்புறத்தில் மகாலட்சுமி வாசம் செய்கிறாள். இதனால் கோவில்களில் காலையில் கோபூஜை செய்தபின் தரிசனம் ஆரம்பமாகிறது.

தொடர்ச்சி 14ம் பக்கத்தில்...

# இப்புவியில் நாம் பயில வந்த பாடம்

குருதேவர் அருளுகிறார்: "நட்பு என்னும் பொக்கிஷம்தான் உங்களுடைய மிக உயர்ந்த சொத்தாகும். ஏனெனில் அது இப்பிறவியைக் கடந்து உங்களுடன் செல்கிறது. நீங்கள் ஏற்படுத்திக்கொண்ட உண்மையான சினேகிதர்கள் அனைவரையும் நீங்கள் மறுபடியும் இறைவனின் இல்லத்தில் சந்திப்பீர்கள். ஏனெனில் உண்மையான அன்பு என்றுமே இழக்கப்படாது. அதே சமயத்தில் வெறுப்பும் கூட என்றும் இழக்கப்படுவதில்லை. நீங்கள் எதையெல்லாம் வெறுக்கிறீர்களோ, அவற்றை அந்தத்தீவிர வெறுப்பிலிருந்து நீங்கள் மீளும் வரை திரும்பத்திரும்ப உங்களிடம் ஈர்க்கவும் செய்கிறீர்கள்.

அன்பானது, தெய்வீக அன்பாக இல்லாவிடில் அது சிறிது காலமே நிலைக்கும். காலங்காலமாக வெள்ளி நிலவொளியின் கீழ் ஒருவருக்கொருவர் அழிவில்லா அன்பை சத்தியம் செய்து கொண்ட காதலர்கள் அனைவருக்கும் என்னவாயிற்று? புவி முழுவதும் அவர்களது மண்டை ஓடுகள் பரவிக் கிடக்கின்றன. நிலவு அவற்றின் பெரும்பாலானவற்றைப் பார்த்து சிரித்து கூறுகிறது.

"எப்படி பொய் பேசினார்கள், அவர்களது நேசம் என்றென்றைக்குமாக நிலைக்கவில்லையே" ஆனால்உங்கள் உள்ளத்தில் நீங்கள் உணரும் அன்பானது இப்புவியைச் சார்ந்ததாக இல்லையெனில்; லௌகீகமானதாக இல்லையெனில்; சிற்றின்பக் கவர்ச்சியின்றி நீங்கள் இறைத்தோழமையின் அடிப்படையில் அனைவரையும் நேசிக்கும் அன்பைப் பெற்று விட்டிருந்தால் நீங்கள்தன்னல நோக்கமின்றி மற்றவர்களை அவர்களுக்காகவே நேசிப்பீர்கள். நீங்கள் இறைவனின் தெய்வீக அன்பைப்பெற்று அதை வெளிப்படுத்தியிருக்கிறீர்கள். கணவன்மனைவி, பெற்றோர்குழந்தை, நண்பர்நண்பர், தாம்மற்ற அனைவர் ஆகியோர்களுக்கிடையில்தூய நிபந்தனையற்ற அன்பை வளர்க்கும் பாடத்தைக் கற்றுக்கொள்வதற்காகத்தான் நாம் இப்பூமிக்கு வந்துள் ளோம்.




உங்களுடைய பகைவர்களைக்கூட நீங்கள் வெறுக்கக் கூடாது. எவரும் முழுவதும் கெட்டவர் இல்லை. உங்களுடைய பிரச்சனைகளை இறைவனிடம் அர்ப்பணியுங்கள். நீங்கள் கவலைப்பட்டீர்களானால் அது உங்கள் இறுதிச்சடங்காகும். நீங்களாகவே முழுவதும் ஏற்பாடு செய்து கொள்வது. உங்களுடைய கவலைகளினால் உயிருடன் புதைக்கப்படுவதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள் அல்லவா! கவலையினால் துன்பப்பட்டு ஏன் ஒவ்வொரு நாளும் சாகவேண்டும்?

ஏழ்மை, துன்பம், ஆரோக்கியக்குறைவு ஆகிய எதை நீங்கள் அனுபவித்துக்கொண்டிருந்தாலும் சரி இப்பூமியில் எவரேனும் ஒருவர் உங்களை விட நூறு மடங்கு அதிகமாக துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

உங்களை மிகவும் துரதிர்ஷ்டசாலி என்று எண்ணிக்கொள்ளாதீர்கள். இதனால் நீங்கள் உங்களையே தோல்வியுறச் செய்து, உங்களுக்கு உதவ என்றும் நாடிக்கொண்டிருக்கும் இறைவனின் சர்வ வல்லமையான ஒளியைத் தடுத்துவிடுகிறீர்கள்."

## இறைவனே நமது இலக்கு

பரமஹம்ஸர் மேலும் அருளுகிறார்: "இறைவனுக்கான விருப்பம் தானாக வருவதில்லை. அது பேணி வளர்க்கப்பட வேண்டும். அந்த விருப்பம் இல்லாத வாழ்க்கைக்கு அர்த்தமே இல்லை. அவனுக்காக வாழ்கின்ற, அவனில் இறக்கின்ற பக்தனிடம் இறைவன் வருகிறான். அவன் தந்த ஆன்மாவைத் தொட்டு கூறுகிறான்: "என் குழந்தாய், எழுந்திரு. நீ வெறும் கனவு கண்டுக்கொண்டிருக்கிறாய். மரணம் உன்னை தீண்டவே இல்லை." அப்பொழுது அனைத்து உலகியல் அனுபவங்களும் தனது உண்மையான ஆன்ம இயல்பைத் தனக்குக் கற்பிப்பதற்காகவே அன்றி, கொடுமைப்படுத்துவதற்காக அல்ல என்பதை பக்தன் அறிகிறான். ஆத்மா எரிக்கப்பட முடியாதது. அது மூழ்கடிக்கப்படவோ அல்லது குத்தப்படவோ அல்லது சிதறடிக்கப்படவோ முடியாதது. பக்தன் உணர்ந்தறிகிறான், "நான் உடல் அல்ல. நான் உருவமற்றவன். நான் பேரானந்தமே" ஒவ்வொரு காலையிலும் நீங்கள் விழித்தெழும்போது, இந்த உண்மையை நினைவுப்படுத்திக்கொள்ளுங்கள்:

"எனது ஆன்மாவின் அகக்காட்சியினின்று நான் இப்போதுதான் வெளி வந்துக்கொண்டிருக்கின்றேன். நான் உடல் அல்ல, நான் கண்ணுக்குப் புலனாகாதவன். நான் பேரானந்தம்; நான் பேரொளி, நான் பேரறிவு, நான் பேரன்பு. இந்தப்பூவுலக வாழ்க்கையைக் கனவு கண்டுக் கொண்டிருக்கின்ற இந்த கனவு உடலில் நான் உறைகின்றேன். ஆனால் என்றுமே நான் சாசுவதமான பரம் பொருள்."

இறைவனை நேசிக்கும் ஒரு பக்தன் இறைவனுக்காகவே வாழுவான். அவன் அனைத்தையும் இறைவனுக்குச் சமர்ப்பணம் செய்து வாழுவான். இறைவனுக்கு முன்னுரிமை அளிப்பான். முன்னுரிமை என்று கூறும்பொழுது ஒரு கதை ஞாபகத்தில் வருகிறது.

முதிய பெண்மணி ஒருவர் ஒரு கோவிலுக்கு முன்னர் வடை சுட்டு விற்கும் தொழில் செய்து கொண்டிருந்தார். தினமும், வடை விற்பனை ஆரம்பிக்கும் முன்னர் அந்த கோவிலுக்குள் சென்று தன்னுடைய துன்பங்களை இறைவனிடம் கூறுவது வழக்கம். ஒருநாள் அவர் அந்தக் கோவிலுக்குள் சென்று இறைவனிடம் கூறினார்: "இறைவா, எனக்கு திருமண வயது வந்த ஒரு மகள் உள்ளாள். அவளுக்கு சீக்கிரமே திருமணம் முடித்து வைப்பாய். நான் இன்றைக்கு நூறு ரூபாய்க்கு வடை விற்றால் பத்து ரூபாய் உனக்குத் தருகிறேன்" என்று கூறிவிட்டு வந்தார். அவருடைய பிரார்த்தனையை அந்தக்கோயில் பூசாரி கேட்டுக்கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து அவர் பத்து ரூபாயுடன் கோவிலுக்குள் வருவதைக் கண்ட பூசாரி, "பாட்டி, நீ அதற்குள் நூறு ரூபாய்க்கு வடை விற்றாயா?" என்று கேட்டார். உடனே பாட்டி, "இல்லை, இல்லை நான் பத்து ரூபாய்க்கு மட்டும்தான் வடை விற்றேன்" என்று பதிலளித்தார். "அவ்வாறிருக்கையில் நீ அந்த பத்து ரூபாயை இறைவனுக்காகக் கொண்டு வந்து கொடுக்கிறாயே! நீ நூறு ரூபாய் விற்ற பின்னர்தானே கடவுளுக்கு பத்து ரூபாய் கொடுப்பதாகச் சொன்னாய்!" என்றார் பூசாரி. "நான் நூறு ரூபாய்க்கு விற்றால் பத்து ரூபாயை கடவுளுக்குத் தருவதாக கூறினேன். அது உண்மைதான். நான் நூறு ரூபாய்க்கு விற்பது எப்போது என்று எனக்கு தெரியாது. இப்போது ரூபாய் பத்துக்கு விற்றேன். அந்த பத்து ரூபாயை இறைவனுக்காக கொடுத்தேன். அவ்வளவுதான். இறைவனிடத்தில் கடன் வைக்கக்கூடாது. அதனால்தான் பத்து ரூபாய்க்கு விற்றதும் நான் அதை கடவுளுக்குக் கொண்டு வந்து தந்தேன். இறைவனிடம் கூறிய

30
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக


ஆன்மிகமலர் மெயில் புக்

வார்த்தையை நான் காப்பாற்றி விட்டேன் எனறு பாட்டி கூறினார். பாட்டி சொன்ன வார்த்தையை கேட்டு பூசாரி ஆச்சரியமடைந்தார். நூறு ரூபாய்க்கு வடை விற்ற பின்னர் பத்து ரூபாய் கடவுளுக்குத் தருவதாகக் கூறியவர், முதன் முதலாக பத்து ரூபாய்க்கு வடை விற்பனை செய்த ரூபாயை அவர் கூறியவாறு கடவுளுக்குத் தந்தார். கடவுளுக்குக் கடன் வைக்கக்கூடாது எனறு நினைக்கிறார் அந்த பாட்டி! கடவுள்மேல் எவ்வளவு பக்தியும் அன்பும் வைத்துள்ளார். என்று பூசாரி எண்ணினார்.

இந்தக் கதையின் பொருள் என்னவென்றால் நாம் அனைவரும் இறைவனுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதுதான். நாம் அனைத்து கடமைகளுடன் இறைவனையும் வைத்துக்கொள்ள வேண்டும். அது நமக்கு இந்த லௌகீக வாழ்க்கைக்கு ஒரு நல்ல நம்பிக்கையான பிடிப்பேயாகும். தினம் தினம் எத்தனையோ படிப்பினைகளை நமக்கு இறைவன் தந்து கொண்டிருக்கிறான். நிலையில்லாத, எதை யும் நம்ப முடியாத இவ்வுலகில் இறைவன் நமக்கு ஒரு ஊன்றுகோல், ஒரு கால் அடிப்பட்டால் மற்றொரு கால் மட்டும் வைத்து நடக்க முடியாது. அப்பொழுது ஒரு ஊன்றுகோல் தேவைப்படுகிறது அல்லவா! அதேபோன்று இறைவனை விடுத்துள்ள இந்த லௌகீக வாழ்க்கை என்பது ஒற்றைக்காலில் வாழ்வது போன்றுதான். நாம் அனைவரும் இறைவனை நம்முடன் வைத்துக்கொள்ள வேண்டும். இது மிகவும் அவசியம். இறைவன் நம்முடன் இருந்தால் நம்முடைய இந்த வாழ்க்கையில் ஊனமுற்ற காலுக்கு ஊன்றுகோலாக இருப்பதைவிட பல மடங்கு நமக்கு உதவியாக இருப்பான் நம்மைப் படைத்த அன்பு இறைவன். அதற்கு மேலோக இறைவனிடத்தில் அன்பும் நம்பிக்கையும் விசுவாசமும் வைத்திருந்தால் அவன் எப்பொழுதும் நம்முடனே இருப்பான்; நம்மை விட்டுப்பிரியமாட்டான். நமக்கு மிகவும் பிடித்தமான உறவினரைப் போன்று இறைவனை நேசிக்க வேண்டும். மிகவும் பிடித்தமான நண்பர்கள் அல்லது உறவினர்களுக்கு பிடித்த மான பொருட்களை நாம் கொடுப்பது போன்று இறைவனுக்கும் பிடித்தமானவற்றை நாம் இதயப்பூர்வமாக அளிக்க வேண்டும். அது நமது அன்பேயாகும். அவனுக்கும் நமக்கும் இடையே உறவை வளர்க்க வேண்டும். நம் அன்பை அவனுக்கு அளிக்க வேண்டும். இந்த மனித வாழ்க்கையில் சாசுவதமான உறவு இறைவன் மட்டுமே! உண்மையான நட்பு இறைவனுடனுள்ள நட்புக்குச் சமம்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

## மகாலட்சுமி கடாட்சம் கிடைக்க எளிய வழிமுறைகள்...



8. மகாவிஷ்ணுவிற்குப் பிடித்த துளசி லட்சுமியின் அம்சம் ஆகும். வீட்டில் துளசி மாடம் வைத்து தினமும் அதை சுற்றி வந்து வழிபட்டு வந்தால் எல்லாச் செல்வங்களும் கிடைக்கும்.
9. வாழை, மாவிலை, எலுமிச்சம்பழம் ஆகியவைகளிலும் மகாலட்சுமி வாசம் செய்கிறாள். அதனால்தான் சுபகாரியங்களில் இவை பயன் படுத்தப்படுகின்றன.
10. தலைமுடியின் முன் வகிட்டில் மகாலட்சுமி வாசம் செய்வதால் திருமணமான பெண்கள் முன்வகிட்டில் குங்குமம் இட்டுக் கொள் கின்றனர்.
11. தீபாவளியன்று அதிகாலை மட்டும் மகாலட்சுமி நல்லெண் ணையில் வாசம் செய்கிறாள்.
12. யானையின் முகத்திலும் குதிரையின் முகத்திலும் லட்சுமி வாசம் செய்கிறாள்.
13. ஸ்ரீவைஷ்ணவத்தை நிலை நாட்டிய வேதாந்த தேசிகர்ஸ்ரீஸ்துதி என்னும் ஸ்தோத்திரத்தில் ஸ்ரீமகாலட்சுமியை மங்களத்துக் கெல்லாம் மங்களமானவள் என்று புகழ்ந்து பாடுகிறார்.
14. ஒரு பக்தனுக்கு பகவானின் அனுக்ரகம் வேண்டும் என்றால் புருஷகார பூதையான மகாலட்சுமியை முதலில் சரணடைய வேண்டும்.

தொடர்ச்சி 17ம் பக்கத்தில்...

www.aanmeegamalar.com





இதுவரை வெளிவந்த
ஆன்மிகமலர் மெயில் புக்
அனைத்து இதழ்களையும் இலவசமாக
www.aanmeegamalar.com
இணையதளத்தில் மின்நூல் பகுதியில்
டவுன்லோடு செய்து படிக்கலாம்




மற்றவருக்கும் நமது இலவச புத்தக சேவைப்பற்றி தெரியப்படுத்தவும்

# மஹாபாரதமும் இராமாயணமும்

மண்ணால் போரெனில் பாரதம்...
பெண்ணால் போரெனில் ராமாயணம்...

சகுனி குழப்பினால் பாரதம்...
கூனி குழப்பினால் ராமாயணம்...

பெண் ஐந்தை மணந்தால் பாரதம்...
பத்தை (10) மறுத்ததால் ராமாயணம்....

அனுமன் கொடிதனில் பறந்தால் பாரதம்...
அனுமன் கடல்தாண்டி பறந்தால் ராமாயணம்...

இறை இப்புவி இறங்கி சாரதியானால் பாரதம் ...
இறை இப்புவி இறங்கி சத்திரியனானால் ராமாயணம்...

மேய்த்தது கோ எனில் பாரதம்..
மேன்மை கோ எனில் ராமாயணம் ...

பகடையால் பகையெனில் பாரதம்....
பாவையால் பகையெனில் ராமாயணம்........

பிறன்மனைவியை அவமதித்ததால் பாரதம்...
பிறன்மனைவியை அபகரித்ததால் ராமாயணம்....

அவதாரம் புனிதனாய் வலம்வந்தது பாரதம்....
அவதாரம் மனிதனாய் வலம்வந்தது ராமாயணம் ...

இறைவன் கீதை தந்தால் பாரதம் ...
இறைவன் சீதை பெற்றால் ராமாயணம்....

நாயகியை தொட்டு சேலைஇழுத்தால் பாரதம்...
நாயகியை தொடாது சோலையில் வைத்தால் ராமாயணம் .....

ஐவருக்கு ஒருத்தியெனில் பாரதம் ....
ஒருவருக்கு ஒருத்தியெனில் ராமாயணம் ....

மறைந்திருந்து அம்பெய்யகற்றால் பாரதம் ...
மறைந்திருந்து அம்பெய்துகொன்றால் ராமாயணம்...

வில்லால் அடித்த வீரனுக்கு விவாகமெனில் பாரதம்...
வில்லை ஒடித்த வீரனுக்கு விவாகமெனில் ராமாயணம்...

கற்புநெறிக்காக பெண் கண்ணை கட்டினால் பாரதம்...
கற்புநெறிக்காக பெண் கனலில் இறங்கினால் ராமாயணம்....

கதையில் குருடன் அரசன் எனில் பாரதம்....
கதையை எழுதியது திருடன் எனில் ராமாயணம்...







## மகாலட்சுமி கடாட்சம் கிடைக்க எளிய வழிமுறைகள்...

15. நம்மாழ்வார் அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா என்று கணப்பொழுதுகூட பிரியாது மகாவிஷ்ணு வுடன் கூடி இருக்கும் மகாலட்சுமியை சரண டைவதே உயர்ந்தது என்று கூறியுள்ளார்.
16. திருமழிசையாழ்வாருக்கு குழந்தைப் பருவத் தில் ஞானப்பால் ஊட்டியது மகாலட்சுமியே.
17. குபேரனிடம் செல்வம் இருந்தாலும் அத்துடன் புகழ், ஆரோக்கியம், நல்வாழ்வு போன்ற பல செல்வங்களை உரியவர்களுக்கு வாரி வழங்குபவள் ஸ்ரீ மகாலட்சுமியே.
18. மகாவிஷ்ணுவுடன் இருக்கும் பொழுது லட்சு மிக்கு இரண்டு கரங்கள். ஆனால் தனியாக சன்னதியிலோ அல்லது தனிக் கோவிலிலோ நான்கு கரங்கள் கொண்டவள். முன் இரு கரங்கள் அபய வரத ஹஸ்தங்கள். பின் இரண்டு கரங்களில் தாமரை மலர் ஏந்தி இருப்பாள்.

தொடர்ச்சி 29ம் பக்கத்தில்...

அரக்கினால் மதில் ஆன அரண்மனை எரிந்தால் பாரதம் ....
அரக்கியின் மதி கோணலால் அரண்மனை எரிந்தால் ராமாயணம் ....

அரங்கனின் செய்கையால் அபலைக்கு அபயமெனில் பாரதம் ....
குரங்கனின் செய்தியால் அபலைக்கு அபயமெனில் ராமாயணம்....

மண்ணின் மயக்கத்தினால் பிளவெனில் பாரதம்...
மானின் மயக்கத்தினால் பிரிவெனில் ராமாயணம்...

உறவுக்குள் சண்டையெனில் பாரதம்...
உறவுக்காக சண்டையெனில் ராமாயணம் ....

– படித்ததை பகிர்ந்தவர்
ஸ்ரீபதி



கத்ரு பந்தயத்தில் வென்றேத் தீர வேண்டும் எனும் எண்ணத்தில் ஒரு தந்திரம் செய்தாள்.

தனது (நாக) புதல்வர்கள் 1000 பேரிடமும் நீங்கள் அந்த குதிரையின் வாலில் கருப்பு வண்ண முடியாகி தொங்கிக் கொண்டிருங்கள். நான் அதை வினதாவுக்கு தூரத்திலிருந்து காட்டி பந்தயத்தில் வென்று விடுவேன் என்றாள்.

அவளது கபடத்திற்கு சர்ப்பங்கள் உடன் வாராததால் கோபம் கொண்ட கத்ரு "பாண்டு வம்ச மன்னன் ஜனமேஜயன் செய்யும் சர்ப்ப யாகத்தின் தீயில் பொசுங்கி விடுவீர்களாக" என்று சாபம் இட்டு விட்டாள்.

ஒரு தாயானவள் சொல்லும் செயலை அப்படியே செய்து முடிக்காமல் அது தர்மத்திற்குப் புறம்பானது என்று தெரிந்ததும் பிள்ளைகள் அதை மறுத்து விடுகின்றனர். மேலும்.ஒரு பெண் தான் வெற்றி பெற எதையும் செய்ய முற்படுவாள் என்று

# "ஆ(ம)ஹா பாரதம்"

## பாகம் 14

பொதுவாக சொல்வது கத்ருவின் விஷயத்தில் ஊர்ஜிதமாகிறது.

இந்த சாபத்தை பிரும்மா அறிந்ததும் "இந்த சாபமானது தெய்வா தீனமாகவே சர்ப்பங்களுக்குக் கத்ருவால் கிடைத்து விட்டது. சர்ப்பங்கள் பெருகுவதைக் கண்ட பிரும்மா கத்ருவின் இந்த சாபத்தை ஆமோதித்து விட்டார்".

"இந்த சர்ப்பங்கள் அடக்க முடியாத விஷம் கொண்டவை. தன் தீவிர விவுத்தால் மற்றவரைப் பீடித்தவாறு திரிகின்றன. பிராணிகளின் நன்மைக்கு கத்ருவின் சாபம் உசிதமாகும்.மற்றவர்க்குத் துன்பம் தருபவரை தெய்வ ஆணை அழிக்கிறது" என்று கூறி கதருவை புகழ்ந்து பின் கச்யபரை அழைத்தார்.

உலகில் நாம் இப்போது காணும் பாம்புகளில் பெரும்பாலனவை கொடிய விஷமற்றவைகளே. கொடிய விஷமுள்ளவைகள் அக்காலத்திலேயே இதுபோன்று ஏதோ ஒரு காரணத்தால் அழிக்கப்பட்டு விட்டன. கொடிய விஷமற்ற பாம்புகளே நாம் காண்பது. அதற்கே





நம் பாடு பெரும்பாடாகி விடுகிறது.

மற்றொரு உண்மையைப் பாருங்கள். ஒருவர் மற்றொருவருக்கு அளிக்கும் சாபம் அப்படியே போய் அவரை சாய்ப்பதில்லை. அது இறைவனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு ; அவரால் அது ஆராயப்பட்டு ஆமோதித்துப் பிறகே சாபம் நேருவதும், தவிர்ப்பதும் உறுதியாக்கப்படுகிறது என்பது தெளிவாகிறது.

க்சயபரிடம் "உன்னால் உண்டாகிய பாம்புகள் மிகவும் பயங்கரமானவைகள். இவைகளை சபித்ததற்காக கத்ருவை கோபிக்காதே. யாகத்தில் பாம்புகள் அழிய வேண்டுமென்று ஏற்கனவே உள்ளதை நீ அறிவாய் ". என்றுக் கூறியதோடு கச்யபருக்கு சர்ப விஷத்தை இறக்கும் வித்தையை அளித்துச் சென்றார்.

இந்த சாபத்தைத் தேட்டு மனக்கலக்கமுற்ற கார்க்கோடகன் எனும் சாபம் தன் தாயிடம் "அம்மா! நீ சிறிதும் கவலைப்படாதே. நான் கருப்பு வண்ண முடியாக அந்தக் குதிரையின் வாலில் இணைந்து கருப்பு வாலாகவே காட்டுவேன்" என்று கூற. கத்ரு மன மகிழ்ந்தார்

மறுநாள் சூரியன் உதித்ததும் காலையிலேயே வினதாவும், கத்ருவும் பந்தயத்தில் வெல்ல உச்சைக்ரவா எனும் குதிரையைக் காணச் சென்றனர். மிகவும் ஆழமானதும், சம்பத்துக்கள் அதிகம் நிறைந்ததுமான கடலை சிறிது தூரத்தில் இருவரும் கண்டனர்.

கத்ருவின் நாகப் புதல்வர்கள் தாயின்சொல்லை மதித்து செயல்பட்டால் ஒரு வேளை சாபம் நீங்கப் பெறலாம். எனவே அதை செய்து முடிப்போம் என முடிவெடுத்து கடலின் அக்கரையை அடைந்தனர்.



சில பிள்ளைகள் தாயின் தவறான பாதைக்கு உடன்படாமல் தாயினை நெறிப்படுத்துகிறார்கள். ஒரு சில பிள்ளைகள் தவறாக இருந்தாலும் தாயின் சொல்லை செய்து முடிக்கிறார்கள். தாய் பிள்ளைகளை நெறிபடுத்துதல் ஒரு சில இடங்களில் என்றால், பிள்ளைகள் தாயை நெறிபடுத்துதலும் ஒரு சில இடங்களில் நிகழ்த்தான் செய்கிறது.

இருவரும் வான்வழியேச் சென்று குதிரை இருக்குமிடத்தை அடைந்தனர். மிக வெண்மையான நிறத்தையுடைய குதிரையின் வாலை கரிய நிறத்தோடு கண்டதும் வினதா துயரத்தில் ஆழ்ந்தாள். அடுத்தக் கணமே பந்தயத்தில் தோற்றதால் அடிமைத்தனத்தின் மனத்திற்க்குரியவளாய் மாறி (கத்ருவின் கபட நாடகமறியாது) அவளிடம் அடிமையானாள்.

வினதா அருணனின் சொல்படியே காத்திருக்க, தக்க சமயம் வாய்த்ததும் தாயின் உதவியின்றியே தேஜோமயனான கருடன் முட்டையை உடைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

பிரளய கால அக்னி போல் தோன்றிய அவரது உடல் சிறிது நேரத்திலேயே விசாலமாகி விட்டது. குரலும் பயங்கரமாக ஒலிக்கலாயின. மிகுந்த பிரகாசத்துடன் பறந்து வருவதைப் பார்த்த தேவர்கள் அக்னி என்றெண்ணி அக்னியை சரணடைந்தனர். அக்னியானவர் இது நானல்ல தேஜஸில் எனக்கு நிகரானவர் கசயபரின் புத்திரர்கருடன். அவரை தரிசிப்பது உத்தமம் வாருங்கள் தரிசிப்போம் என்று அவர்களையும் அழைத்துக் கொண்டுச் சென்றார்.

அடுத்த இதழில்....

- **Thali**, Ph:09786223577




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033 / 07299992699

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033
7299992699 / 8939499598

# திருப்தி ஏற்பட்டுவிட்டால் வெறுப்பு போய்விடும்

15 நாட்களுக்கு ஒரு முறை செய்வது 'பட்ச வழிபாடு', சிறப்பு வாய்ந்தது. ஏதாவது ஒரு பட்சத்திலாவது ஆண்டவனை பிரதோஷ கால வழிபாட்டில் நினைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அமாவாசை–ஒரு பட்சம். பௌர்ணமி ஒரு பட்சம். இந்த ஒரு பட்ச காலத்தில் கடவுளின் ஒரு நினைவு வலிமை வாய்ந்தது.

நாளும் இறைவனை எண்ணுங்கள்! தினமும் ஆண்டவனை சிறிதளவு நினைக்க தயாராக இருக்கிறீர்கள். ஆனால், அப்படி நினைப்பது எப்படி என்று தெரியவில்லை. எப்படி நினைப்பது? என்ற சிறிய உணர்வு தெரிந்துவிட்டால், 'அனுக்கிரகம்' என்ற அருள் கிடைத்துவிடும் என்பதை சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான், ஆண்டவன் பாடல்களை விவரமாக ஆராய்ச்சிக்குரியதாக பாடிக்கொண்டே போகிறான்?

இறங்க முடியாததில் இறங்கலாம்; ஏற முடியாததில் ஏறலாம்; உயரப் பறக்கலாம் – இவை அதிகமாக மனிதன் எண்ணுகிற எண்ணம். தமிழிலே 'அருள்' – அனுக்கிரகபூதன். எங்கு சென்றாலும், ஏதாவது ஒரு பொருள் கிடைத்தால் அனுக்கிரகம். நம்மிடத்திலிருந்தோ, நாம் செல்கின்ற இடத்திலிருந்தோ கருத்து பிறந்தால் – திருப்தி, இதுதான் இறைவனை நினைக்கின்ற வேலையைச் செய்கிறது.

திருப்தி ஏற்பட்டுவிட்டால், அந்த நிமிடத்தில் அனுக்கிரகம் உயிர் நாடிக்கொண்டு இருக்கிறது. என்ன பலன்? வெறுப்பு போய்விடும். வெறுப்பு நம்மிடத்திலேயே நமக்கு வராது. அது அகன்று விடுதல் வேண்டும். இந்த நிலை ஏற்பட்டுவிட்டால், பிரதோஷம் நீங்கிவிட்டது (என்று பொருள்). பாபம் என்றால் பயப்படாதீர்கள்.

ஏன்? என்னிடத்தில் திருப்தி ஏற்படவில்லை, கால்/கை, பஞ்ச இந்திரியங்களில் திருப்தி வேண்டும். சிந்தனையில், வாழ்க்கையில் திருப்தி வேண்டும்.

குழந்தைகள் பொம்மை வைத்து விளையாடும் வாழ்க்கை என்பது பெரிய விளையாட்டு. மனிதன் கடைசி வரை விளையாட வேண்டும். குழந்தை கண் முன் விளையாடுகிறது. வாழ்க்கை ஒரு விளையாட்டு என்று எண்ணி விளையாடு! எது கிடைத்தாலும் ஏற்றுக் கொள்ளுங்கள்!



# சீடனின் கேள்வியும் ஞானியின் பதிலும்

**சீடன்:** பலன் என்பது உடனே கிடைத்தால் தானே நம்பிக்கை வரும்?

**ஞானி:** உன் நம்பிக்கை கடவுளுக்கு வேண்டாம், ஏன் என்றால் அவன் உண்மை. தேங்காய் உடைத்து பயன் கிடைப்பது தானா உன் மதம், உன் கடவுள், உன் நம்பிக்கை எல்லாம்? இல்லை, உன் பரிணாம வளர்ச்சியை உன் உயர்ந்த நிலையே மதம், கடவுள் எல்லாம்.

**சீடன்:** பக்தி, ஞானம், சமாதி, பூஜை இவையெல்லாம் எதற்கு?

**ஞானி:** அநித்தியமான உடம்பை வைத்துக்கொண்டு நித்தியமான பொருளான கடவுளை உணர தைரியம் வர இவைகள் உதவுகிறது.

**சீடன்:** ஆஸ்திகர்களுக்கு இது இல்லையா?

**ஞானி:** பயந்து கொண்டு வாழ்பவர்கள் ஆஸ்திகர்கள் அல்ல.

**சீடன்:** பூஜைகளுக்கு பலன்கள் ஏன் சொல்கிறார்கள்?

**ஞானி:** எந்த விஷயத்திலிருந்தும் ஏதாவது ஒன்று கிடைக்கவில்லை என்றால் மனிதனுக்கு அதில் ருசி வருவதில்லை என்பதால்.

**சீடன்:** சாஸ்திரங்களை, மந்திரங்களை படித்தால் போதுமா?

**ஞானி:** போதாது. எந்த விஷயத்தையும் தெரிந்து உள்ளே வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு உன்னை நல்ல பாத்திரமாக்கிக் கொள்.

**சீடன்:** பகுத்தறிவு என்பது என்ன?

**ஞானி:** வீடு, வாசல், உணவு, துணிமணிகள் எதில் குறைவு இருந்தாலும் உலகத்தில் வித்தியாசங்கள் எவ்வளவு இருந்தாலும், வாழ்வில் உயர்வையும், உன்னதத்தையும் புரிந்து உணர்ந்து வளர்வதே பகுத்தறிவு. ஐந்து அறிவுள்ள உயிரினங்களால் இது முடியாது. ஆறாவது அறிவை உணராத நிலையில் தான் சண்டை சச்சரவுகள் வருகிறது.

**சீடன்:** இந்த உணர்வு உபதேசத்தால் வருமல்லவா?

**ஞானி:** குருவைப் பார்ப்பதற்கு முன், உபதேசம் பெறும் முன் நீ பொதுவான விழிப்புணர்ச்சியைப் பெறவேண்டும்.

**சீடன்:** அது இல்லாவிட்டால்?

**ஞானி:** சமயத்தைப் பற்றிய பொதுவான அறிவு, விழிப்புணர்ச்சி இல்லாத தால் தான் மதச்சண்டைகளும் வருகிறது.

**சீடன்:** சமயத்தலைவர்கள் இத்தகைய அறிவைத் தரவில்லையே?

**ஞானி:** அடுத்தவர் சொல்லி விழித்துக் கொள்ள வேண்டியது அல்ல மதம். உன்னுடைய பகுத்தறிவு இதற்கு உதவ வில்லை என் றால் அதை "தண்ட அறிவு" என்றே கொள்ள வேண்டும்.

– ஞானச்சேரி ஞானிகள் –
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து
தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன்,
போன் 098410 28028

# நவக்கிரக தோஷம் தீர்க்கும் எளிய பரிகாரம்

1. படுக்கை அறையில் தலை அருகே நீரை வைத்து உறங்கிவிட்டு அந்த நீரை காலையில் செடிகளுக்கு விட சுக்ரதோஷம் படிபடியாக குறையும். இந்த விவரத்தை மாற்றி சொல்லலாம் ,படுக்கைக்கு நாம் எடுத்து செல்லும்குடி நீர் காலையில் மிதம் இருந்தால் செடிகளுக்கு குறிப்பாக துளசி அல்லது தொட்ட சினிக்கி செடிகளுக்கு விட்டு விட வேண்டும்.
2. அடிக்கடி பசுவிற்கு வாழை பழம்,கற்கண்டு பொங்கல் கொடுப்பது #சந்திரனின் ஆசிகளை நமக்கு கொடுத்து புகழை பெற்று தரும்.
3. வசதி இல்லாத குடும்பத்தினருக்குப் ஈமச் சடங்குகள் செய்ய பணம், பொருள் கொடுத்து உதவி செய்தல் சனியின் ஆசிகளை கொடுத்து ஆயுளை விருத்தி செய்யும்.
4. ஆசான், வேதம் படித்தவர், நம் முன்னோர்கள் மற்றும் சாதுக்களை விழுந்து வணங்கிட, புண்ணிய யாத்திரைக்கு இல்லாதவருக்கு பொருள் கொடுத்து உதவுது ,குழந்தை பெற்ற ஏழை தம்பதியருக்கு பொருள் கொடுத்து உதவுவது , குருவின் ஆசிகள் கிடைக்கும்.
5. சிதலம் அடைந்த கோவில்களுக்கு நீர்நிலை உண்டாக்குதல் /தண்ணீர் தொட்டி /குளம் சரி செய்தல் அல்லது செய்பவருக்கு உதவுதல் #தேவதைகளின் ஆசிகளை கொடுத்து நமக்கு வசியமும் கவர்ச்சியும் கொடுத்துவிடும்.
6. சிவ பெருமானுக்கு அன்னத்தால்அபிஷேகம் செய்வதும் பசித்து தவிக்கும் உயிர்களுக்கு உணவு அளிப்பதும்,கோவிலுக்கு சொர்ணத்தை தானமாக அல்லது கலசத்திற்கு தருவது, தொழு நோய்/ குஷ்டம் கண்டவர்களுக்கு வைத்திய செலவு அல்லது அவர்களுக்கு நல்ல உணவு அளிப்பது சூரியனின் ஆசிகளை கொடுத்து நல்ல ஆரோக்கியம் மற்றும் வம்ச விருத்தி செய்யும்.
7. திருமணம் செய்ய ஏழை பெண்களுக்கு பொருள் கொடுத்து உதவுதல் ,நம் வாழும் மனை, தொழில் செய்யும் மனை கைகளால் தொட்டு வணங்குதல், மேலும் பூமிக்கு மரியாதை செய்தல்,பல உயிர்களை வளர்த்தல் (விலங்கு ,பறவைகள் ),உயிர் பலிகளை நாம் தவிர்த்தல் ,இல்லாதவர்களுக்கு மருத்துவ செலவிற்கு பணம் கொடுத்தல் #செவ்வாயின் ஆசிகளை கொடுத்து அஷ்ட சுகம்களையும் தரும்.
8. ஏழை குழந்தைகளுக்கு கல்விக்கு பொருள் உதவி செய்தல் ,புதன் கிழமைதோறும் அன்னதானம் செய்தல், புதிய உடைகளை தானம் செய்தல் (குறிப்பாக குளிர் காலத்தில் செய்வது) புதனின் ஆசிகளை நமக்கு கொடுத்து சண்டை, பொறாமையினால் வரும் நோய் (திருஷ்டி)நீதி மன்ற சோதனை போன்ற தொல்லைகளை விலக்கி நல்ல தொழில், மென்மையான வாழ்க் கையை கொடுக்கும்.
9. நாகம்களை கண்டதும் அடிக்காமல் இருப் பது, இறந்த நாகத்தின் உடலை கண்டதும் தீயிட்டு கொளுத்துவது, குடிகெடுத்தவன், குடிகாரன், குரு துரோகி, பசுவை கொன்றவன், சண்டாளன் இவர்களிடம் நட்பு கொள்ளாமல் தவிர்ப் பது ராகு_கேது ஆசிகளை கொடுத்து அதிர்ஷ்டம், போகம், மற்றும் சகல பாக் கியத்தை அனுபவிக்கும் ஆசிகளை தரும். (இந்த பஞ்ச மஹா பாவிகளை அடையாளம் கண்டு கொள்வது சற்று சிரமும் தான், தெரிந்து சேர்வது நமக்கு தரித்தரம்)
10. பாழடைந்த சிவன் கோவி லில் விளக்கு ஏற்றுவது, பிரதோஷ நாளில் சிவ ஸ்தலங்களுக்கு முடிந்த வரையிலான அபிஷேகத்திற்கு தேவையான பொருட்களைவாங்கி கொடுப்பது, வெள்ளத் துடன் பச்சரிசி துளை கலந்து அந்த கோவிலின் சுற்று பிரகாரத்தில் தூவி விடுவது தேவர்களை சாந்தி படுத்திவிடும், இவர்கள் நம் முன்னோர்களுக்கு மோட்ச பதவி அளிப்பார்கள். இவைகள் பொதுவானவை வழக்கமாக செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை. புரிந்து செய்தாலும், தெரியாமல் செய்தாலும் பலன் ஒன்று தான்.




அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# வீட்டிலேயே சுத்தமான திருநீறு தயாரிக்கும் வழி முறை



பசுவானது மகாலட்சுமியின் வாசஸ்தலமாக விளங்குகிறது. பசுவின் சாணத்தை அக்னியில் இட்டு பஸ்பமாக்கி திருநீறு தயாரிக்கப்படுகிறது. இந்த உடலை சுத்தப்படுத்தி, அதற்குள் உள்ள ஆத்மாவை பரிசுத்தமாக்கும் வல்லமை பெற்றது திருநீறு. மகா பஸ்பமாக கருதப்படும் பரமாத்மாவும், விபூதி எனப்படும் திருநீறு பஸ்மமும் முற்றும் முடிந்த நிலையில் ஒன்றாக கருதப்படுவதால், விபூதி அணிந்து இறைக்காட்சியையும் பெறுவது சாத்தியமே என்று அருளாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

பல்வேறு முறைகளில் திருநீறு தயாரிக்கப்பட்டாலும், வீடுகளில் நாமே தயாரிக்கும் முறை பற்றி இங்கே காணலாம். காராம்பசுவின் சாணம் பூமியில் விழுவதற்கு முன்னர் பிடித்து, (அவ்வாறு இயலாவிடில், துணியை தரையில் விரித்து வைத்தும் பிடித்துக்கொள்ளலாம்) அதன் கோமியத்தை விட்டு கலக்கி, சிறு உருண்டைகளாக மாற்றி காய வைத்து, தூசிகள் இல்லாது எடுத்து வைத்து கொள்ளவேண்டும்.

அந்த உருண்டைகளை 'திரிபுர ஸம்ஹார காலமான' கார்த்திகை மாத பவுர்ணமியில் வரும் கிருத்திகை நட்சத்திரமான 'கார்த்திகை தீபம்' நாளில், நெருப்பில் இடவேண்டும். பாதுகாப்பான இடத்தில் அது நன்றாக எரிந்து தானாகவே ஆறும் வரையில் சில காலம் விடவேண்டும்.

மார்கழி மாதம் முழுவதும் பனி பொழிந்து, அந்த சாம்பலானது நிறம் மாறும் வரையில் விட்டுவிட்டு, தை மாதத்தில் அந்த சாம்பலை கிளறி விடவேண்டும்.

அதன் பின்னர், மாசி மாதத்தில் வரக்கூடிய 'மகா சிவராத்திரி' அன்று காலையில், அந்தச் சாம்பலை எடுத்து, ஒரு பானையின் வாயில் சுத்தமான, மெல்லிய துணியை கட்டி, சாம்பலை துணியின் மேல் போட்டு, கைகளால் தேய்க்க வேண்டும்.

அதன்மூலம், மென்மையான துகள்கள் திருநீறாக பானைக்குள் சேரும். அதை எடுத்து சிவபெருமானுக்கு திருநீறு அபிஷேகம் செய்வித்த பின்னர் வீட்டுக்கு எடுத்து வந்து, அதை உபயோகப் படுத்துவது தான் மேன்மையான முறையாகும். இந்த முறையை தவிர சாந்திக பஸ்மம், காமத பஸ்மம், பவுஷ்டிக பஸ்மம் ஆகிய சாஸ்திர ரீதியாக தயாரிக்கும் முறைகளும் நடைமுறையில் உள்ளன. (மேற்கண்ட முறையில் திருநீறு தயாரிக்க இயலாவிட்டால், சுத்தமான பசுஞ்சாணம் கொண்டு திருநீறு தயாரிக்கும் பல கோசாலைகள் மூலமாகவும் வாங்கிக்கொள்ளலாம்)





வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்

தொடர்பு கொள்ளவும்:
ஆசிரியர்: நாகராஜன்
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 08825844033



# 20 வகை பிரதோஷங்களும் அற்புதமான பலன்களும்

1. தினசரி பிரதோஷம்
2. பட்சப் பிரதோஷம்
3. மாசப் பிரதோஷம்
4. நட்சத்திரப் பிரதோஷம்
5. பூரண பிரதோஷம்
6. திவ்யப் பிரதோஷம்
7. தீபப் பிரதோஷம்
8. அபயப் பிரதோஷம் என்னும் சப்தரிஷி பிரதோஷம்
9. மகா பிரதோஷம்
10. உத்தம மகா பிரதோஷம்
11. ஏகாட்சர பிரதோஷம்
12. அர்த்தநாரி பிரதோஷம்
13. திரிகரண பிரதோஷம்
14. பிரம்மப் பிரதோஷம்
15. அட்சரப் பிரதோஷம்
16. கந்தப் பிரதோஷம்
17. சட்ஜ பிரபா பிரதோஷம்
18. அஷ்ட திக் பிரதோஷம்
19. நவக்கிரகப் பிரதோஷம்
20. துத்தப் பிரதோஷம்

## 1.தினசரி பிரதோஷம்

தினமும் பகலும், இரவும் சந்திக்கின்ற சந்தியா காலமாகிய மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரை உள்ள காலமாகும். இந்த நேரத்தில் ஈசனைத் தரிசனம் செய்வது உத்தமம் ஆகும். நித்தியப்பிரதோஷத்தை யார் ஒருவர் ஐந்து வருடங்கள் முறையாகச் செய்கிறார்களோ அவர்களுக்கு “முக்தி” நிச்சயம் ஆகும் என்கிறது நமது சாஸ்திரம்.

## 2. பட்சப் பிரதோஷம்

அமாவாசைக்குப் பிறகான, சுக்லபட்சம் என்ற வளர் பிறை காலத்தில் 13வது திதியாக வரும் “திரயோதசி” திதியே பட்சப் பிரதோஷம் ஆகும். இந்தத்திதியின் மாலை நேரத்தில் பட்சிலிங்க வழிபாடு [பறவையோடு உள்ள அது சம்பந்தப்பட்ட லிங்கம் மைலாப்பூர், மயிலாடு துறை போல்] செய்வது உத்தமம் ஆகும்.

## 3. மாசப் பிரதோஷம்

பவுர்ணமிக்குப் பிறகு வரும் கிருஷ்ணபட்சம் என்ற தேய்பிறை காலத்தில், 13வது திதியாக வரும் “திரயோதசி” திதியே மாதப் பிரதோஷம் ஆகும். இந்த திதியின் மாலை நேரத்தில் “பாணலிங்க” வழிபாடு [பல்வேறு லிங்க வகைகளில் பான லிங்கம் ஒரு வகை] செய்வது உத்தம பலனைத் தரும்.

## 4. நட்சத்திரப் பிரதோஷம்

பிரதோஷ திதியாகிய “திரயோதசி திதி”யில் வரும் நட்சத்திரத்திற்கு உரிய ஈசனை பிரதோஷ நேரத்தில் வழிபடுவது நட்சத்திர பிரதோஷம் ஆகும்.

## 5. பூரண பிரதோஷம்

திரயோதசி திதியும், சதுர்த்தசி திதியும் சேராத திரயோதசி திதி மட்டும் உள்ள பிரதோஷம் பூரண பிரதோஷம் ஆகும். இந்தப் பிரதோஷத்தின் போது “சுயம்பு லிங்கத்தை”த் தரிசனம் செய்வது உத்தம பலனை தரும். பூரண பிரதோஷ வழிபாடு செய்பவர்கள் இரட்டைப் பலனை அடைவார்கள்.

## 6. திவ்யப் பிரதோஷம்

பிரதோஷ தினத்தன்று துவாதசியும், திரயோதசியும் சேர்ந்து வந்தாலோ அல்லது திரயோதசியும், சதுர்த்தசியும் சேர்ந்து வந்தாலோ அது “திவ்யப் பிரதோஷம்” ஆகும். இந்த நாளன்று மரகத லிங்கேஸ்வரருக்கு அபிஷேக ஆராதனை செய்தால் பூர்வஜென்ம வினை முழுவதும் நீங்கும்.

## 7. தீபப் பிரதோஷம்

பிரதோஷ தினமான திரயோதசி திதியில் தீப தானங்கள் செய்வது, ஈசனுடைய ஆலயங்களைத் தீபங்களால் அலங்கரித்து ஈசனை வழிபட சொந்த வீடு அமையும்.

## 8. அபயப் பிரதோஷம் என்னும் சப்தரிஷி பிரதோஷம்

வானத்தில் “வ” வடிவில் தெரியும் நட்சத்திர கூட்டங்களே, “சப்தரிஷி மண்டலம்” ஆகும். இது ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களில் வானில் தெளிவாகத் தெரியும்.

இந்த மாதங்களில் திரயோதசி திதியில் முறையாக பிரதோஷ வழிபாடு செய்து, சப்தரிஷி மண்டலத்தைத் தரிசித்து வழிபடுவதே அபயப் பிரதோஷம் என்னும் சப்தரிஷி பிரதோஷம் ஆகும். இந்த வழிபாட்டை செய்பவர்களுக்கும் ஈசன் தரம் பார்க்காது அருள் புரிவான்.

## 9. மகா பிரதோஷம்

ஈசன் விஷம் உண்ட நாள் கார்த்திகை மாதம், சனிக்கிழமை, திரயோதசி திதி ஆகும். எனவே சனிக்கிழமையும், திரயோதசி திதியும் சேர்ந்து வருகின்ற பிரதோஷம் “மகா பிரதோஷம்” ஆகும். இந்த மகா பிரதோஷத்து அன்று எமன் வழிபட்ட சுயம்பு லிங்க தரிசனம் செய்வது மிகவும் உத்தமம் ஆகும். மாசி மாதம் வரும் மகா சிவராத்திரிக்கு முன்னால் வரும் பிரதோஷமும், “மகா பிரதோஷம்” எனப்படும்.

## 10. உத்தம மகா பிரதோஷம்

சிவபெருமான் விஷம் அருந்திய தினம் சனிக்கிழமையாகும். அந்தக் கிழமையில் வரும் பிரதோஷம் மிகவும் சிறப்பானதாகும். சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் வளர்பிறையில், சனிக்கிழமையில்


ஆன்மிகமலர் மெயில் புக்

திரயோதசி திதியன்று வரும் பிரதோஷம் உத்தம மகா பிரதோஷம் ஆகும். இது மிகவும் சிறப்பும் கீர்த்தியும் பெற்ற தினமாகும்.

### 11. ஏகாட்சர பிரதோஷம்

வருடத்தில் ஒரு முறை மட்டுமே வரும் மகா பிரதோஷத்தை `ஏகாட்சர பிரதோஷம்' என்பர். அன்றைக்கு சிவாலயம் சென்று, `ஓம்' என்ற பிரணவ மந்திரத்தை எத்தனை முறை ஓத முடியுமோ, அத்தனை முறை ஓதுங்கள். பின், விநாயகரையும் வழிபட்டு, ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் வழங்கினால் பல விதமான நன்மைகள் ஏற்படும்.

### 12. அர்த்தநாரி பிரதோஷம்

வருடத்தில் இரண்டு முறை மகாபிரதோஷம் வந்தால் அதற்கு அர்த்தநாரி பிரதோஷம் என்று பெயர். அந்த நாளில் சிவாலயம் சென்று வழிபட்டால், தடைப்பட்ட திருமணம் நடைபெறும். பிரிந்து வாழும் தம்பதி ஒன்று சேர்வார்கள்.

### 13. திரிகரண பிரதோஷம்

வருடத்துக்கு மூன்று முறை மகாபிரதோஷம் வந்தால் அது திரிகரண பிரதோஷம். இதை முறையாகக் கடைப்பிடித்தால் அஷ்ட லட்சுமிகளின் ஆசியும் அருளும் கிடைக்கும். பிரதோஷ வழிபாடு முடிந்ததும் அஷ்ட லட்சுமிகளுக்கும் பூஜை வழிபாடு செய்வது மிகவும் நல்லது.

### 14. பிரம்மப் பிரதோஷம்

ஒரு வருடத்தில் நான்கு மகா பிரதோஷம் வந்தால், அது பிரம்மப் பிரதோஷம். இந்தப் பிரதோஷ வழிபாட்டை முறையாகச் செய்தால் முன்ஜென்மப் பாவம் நீங்கி, தோஷம் நீங்கி நன்மைகளை அடையலாம்.

### 15. அட்சரப் பிரதோஷம்

வருடத்துக்கு ஐந்து முறை மகா பிரதோஷம் வந்தால் அது அட்சரப் பிரதோஷம். தாருகா வனத்து ரிஷிகள். `நான்' என்ற அகந்தையில் ஈசனை எதிர்த்தனர். ஈசன், பிட்சாடனர் வேடத்தில் வந்து தாருகா வன ரிஷிகளுக்குப் பாடம் புகட்டினார். தவறை உணர்ந்த ரிஷிகள், இந்தப் பிரதோஷ விரதத்தை அனுஷ்டித்து பாவ விமோசனம் பெற்றனர்.

### 16. கந்தப் பிரதோஷம்

சனிக்கிழமையும், திரயோதசி திதியும், கிருத்திகை நட்சத்திரமும் சேர்ந்து வரும் பிரதோஷம் கந்தப் பிரதோஷம். இது முருகப் பெருமான் சூரசம்ஹாரத்துக்கு முன் வழிபட்ட பிரதோஷ வழிபாடு. இந்தப் பிரதோஷத்தில் முறையாக விரதம் இருந்தால் முருகன் அருள் கிட்டும்.

### 17. சட்ஜ பிரபா பிரதோஷம்

ஒரு வருடத்தில் ஏழு மகா பிரதோஷம் வந்தால் அது, `சட்ஜ பிரபா பிரதோஷம்'. தேவகியும் வசுதேவரும் கம்சனால் சிறையிடப்பட்டனர். ஏழு குழந்தைகளைக் கம்சன் கொன்றான். எனவே, எட்டாவது குழந்தை பிறப்பதற்கு முன்பு ஒரு வருடத்தில் வரும் ஏழு மகா பிரதோஷத்தை முறையாக அவர்கள் அனுஷ்டித்ததால், கிருஷ்ணர் பிறந்தார். நாம் இந்த விரதத்தைக் கடைப்பிடித்தால் முற்பிறவி வினை நீங்கி பிறவிப் பெருங்கடலை எளிதில் கடக்கலாம்.

### 18. அஷ்ட திக் பிரதோஷம்

ஒரு வருடத்தில் எட்டு மகா பிரதோஷ வழிபாட்டை முறையாகக் கடைப்பிடித்தால், அஷ்ட திக்குப் பாலகர்களும் மகிழ்ந்து நீடித்த செல்வம், புகழ், கீர்த்தி ஆகியவற்றைத் தருவார்கள்.

### 19. நவக்கிரகப் பிரதோஷம்

ஒரு வருடத்தில் ஒன்பது மகா பிரதோஷம் வந்தால், அது நவக்கிரகப் பிரதோஷம். இது மிகவும் அரிது. இந்தப் பிரதோஷத்தில் முறையாக விரதம் இருந்தால் சிவனின் அருளோடு நவக் கிரகங்களின் அருளும் கிடைக்கும்.

### 20. துத்தப் பிரதோஷம்

அரிதிலும் அரிது பத்து மகாபிரதோஷம் ஒரு வருடத்தில் வருவது. அந்தப் பிரதோஷ வழிபாட்டைச் செய்தால் பிறவி குறைபாடுகள் கூட சரியாகும்.









# மகாலட்சுமி கடாட்சம் கிடைக்க எளிய வழிமுறைகள்...

17ம் பக்கத் தொடர்ச்சி...

19. வீரம் உடையவர்கள், சோம்பல் இல்லா மல் சுறுசுறுப்பாக இருப்பவர்கள்,தவம் உடைய வர்கள், ஈகை குணம் கொண்டவர்கள் செல்வத்தை நன்கு அனுபவிப்பவர்கள் ஆகியவர்களை நான் அடைகிறேன் என் கிறாள் மகாலட்சுமி.
20. மகாலட்சுமி ஓரிடத்தில் நிலைக்க மாட் டாள். அதனால் சஞ்சலா, சபலா என்ற பெயர்களும் அவளுக்கு உண்டு.
21. லட்சுமி பிரம்மனுடன் பிறந்தவள். இருவர் நிறமும் செம்பொன் நிறமாகும்.
22. லட்சுமிக்கு உலூகம் எனப்படும் ஆந்தை ஒரு வாகனம். மேற்கு வங்கத்தில் லட்சுமி பூஜையின்போது ஆந்தையை வழிபடுவது வழக்கம்.
23. மகாலட்சுமியின் பரிபூரண அருளைப் பெற்றது சுக்கிர வாரம் எனப்படும் வெள்ளிக்கிழமை. சுக்கிரனின் அதிதேவதை மகாலட்சுமி. எனவே வெள்ளிக்கிழமைகளில் சூரியன் உதயமான இரண்டு மணி நேரத்திற்குள் பூஜிப்பது. தரிசனம் செய்வது ஆகியவை மகாலட்சுமியின் அருள் பெற உதவும்.
24. லட்சுமிக்கு ஏற்ற நாள் வியாழக்கிழமை மாலை குபேர காலம் எனப்படுகிறது. பவுர்ணமியில் வரும் வியாழன் சிறப்பு. வளர்பிறை பஞ்சமி, வெள்ளியன்று வரும் அஷ்டமியும் சிறந்தது.
25. லட்சுமியின் திருக்கரங்கள் ஸ்வர்ண ஹஸ்தம் எனப்படுகிறது. எல்லா லட்சுமி களும் அபய வரத ஹஸ்தத்துடன் அருள் புரிகின்றார்கள்.
26. லட்சுமியின் பெருமையை ஸ்ரீசூக்தம், ஸ்ரீசுதுதி, கனகதாரா ஸ்தோத்திரம், மகாலட்சுமி அஷ்டகம், அஷ்டோத்திர சதநாமாவளி ஸ்தோத்திரம் போன்றவை விளக்குகின்றன.
27. வரலட்சுமி விரதம் இருக்கும் பெண்களுக்கு அஷ்டபோக பாக்கியங்களும் கிடைக்கும்.
28. லட்சுமி செல்வத்தின் அதிபதி. தீபாவளி அன்று லட்சுமி பூஜை செய்வதால் செல்வம் இரட்டிப்பாக பெருகும்.

# பல இன்னல் தரும் துர்மரண ஆத்மாக்கள்

ஆவிகள் சூரியனை நோக்கிச் சென்றால் சொர்க்கம்! சந்திரனை நோக்கிச் சென்றால் வைகுண்டம்!! இங்கு செல்லும் ஆவிகள் மறுபிறவி பிறக்கும்.

சனிக்கிரகத்தை நோக்கிச் சென்றால் நரகம். பல ஆண்டுகள் கடும்வேதனையை அனுபவிக்க வேண்டும். இதுபற்றிய முழுவிபரம் கருட புராணத்தில் இருக்கின்றது.

**திடீர் விபத்து, தற்கொலை, போர், கலகம், கொலை, எதிர்பாராத மரணம் இவற்றால் இறப்பவர்கள் முறைப்படி இறக்கும் காலம் வரை, எங்கே இறந்தார்களோ, அங்கேயே ஆவியாக இருக்க வேண்டும்**

இறந்தது ஆண் எனில் அதற்கு பேய் என்றும், பெண் எனில் பிசாசு என்றும் பெயர்.

நம் சூட்சும உடல் ஸ்தூல உடலான ஐம்பூத உடலில் இருந்து பலவந்தமாக பிரிக்கப்படுவதால் இறந்தவரின் ஆவி எந்த இடத்தில் மரணமடைந்ததோ அங்கேயே சுற்றும். சுமார் 20 அடி சுற்றளவுக்குள் சுற்றும்.வெளியே எங்கும் செல்ல முடியாது. உயரேயும் பறக்க முடியாது. இதைத்தான் மந்திர தந்திரங்கள் தெரிந்தவர்கள் தீய செயலுக்கு பயன்படுத்துவார்கள். அருளாளர் களின் ஆசி கிடைத்தால் இந்த ஆவிகளுக்கு விடுதலை கிடைத்துவிடும்.

துர்மரண ஆவிகள் குழந்தைப் பேற்றைத் தடுக்கும் ஆற்றல் நிறைந்து காணப்படும். ஆண், பெண் இருவருக்கும் குழந்தைப்பேறுக்குண்டான தகுதி இருந்தாலும் சில நேரங்களில் இதுபோன்ற துர் ஆவிகளால் குழந்தைப் பேறு தடுத்து நிறுத் தப்படும்.

துர்மரணம் அடைந்தவர்களின் பெயரை குழந்தைகளுக்கு வைக்கக்கூடாது. அவர்களை வணங்கக்கூடாது. அவர்களுக்கு படையல் போடக்கூடாது. உச்சாடன கணபதி ஹோமம் மற்றும் பிதுர் ஹோமம் மூலம் அவைகளை வேறிடத்திற்குப் போகச் செய்யலாம்.

துர்மரணமடைந்தது வாலிப வயதுப் பையனாக இருந்தால் வாலிப வயதுப் பெண்ணைத் துன்புறுத்தும். வாலிப வயது பெண்ணாக இருந்தால் வாலிப வயதுப் பையனைத் துன்புறுத்தும். கைகள், கால்கள் உள்ளங்கால்கள் தொப்புள் ஆகிய இடங்களில் மருதாணி இலையை மட்டும் பிடுங்கி அரைத்துத் தடவி வந்தால் துர் ஆவிகள் தாக்காது. (இதனால்தான் பெண்கள் அடிக்கடி மருதாணி அணிய வேண்டும் என்று முன்னோர்கள் கூறினார்கள். தற்போது கடைகளில் விற்கும் மெகந்திக்கு பேய் பிசாசுகளை விரட்டும் சக்தி கிடையாது. சுத்தமான மருதாணி இலைக்கே இந்த சக்தி உள்ளது.)

> “துர்மரணம் அடைந்தவர்களின் பெயரை குழந்தைகளுக்கு வைக்கக்கூடாது. அவர்களை வணங்கக்கூடாது. அவர்களுக்கு படையல் போடக்கூடாது. உச்சாடன கணபதி ஹோமம் மற்றும் பிதுர் ஹோமம் மூலம் அவைகளை வேறிடத்திற்குப் போகச் செய்யலாம்”

ட்யூப்லைட் வெளிச்சத்தில் துர் ஆவிகள் செயல்பட முடியாது. ஏன் எனில் அதில் பாதரசம் உள்ளது. பிரண்டைத் துவையல், தடியங்காய் (வெண்பூசணி லேகியம்), வெள்ளைப்பூண்டு லேகியம் சாப்பிட்டால் துர் ஆவிகள் தாக்குதல் இராது. வீடுகளில் வெண் பூசணியை கட்டி தொங்கவிடுவதும் இதற்குத்தான். சாம்பிராணி, வலம்புரிக்காய், கோஷ்டம், விரலி மஞ்சள் ஆகியவைகளை நன்கு இடித்து அதிகாலை மற்றும் இரவு நேரங் களில் புகைபோட ஆவிகள் ஓடி விடும். புகைபோட்ட பின் கைகளை நன்கு கழுவ வேண்டும்.

ஹாஸ்டல்கள், அரண்மனைகள், ஆஸ்பத்திரிகள், சில வீடுகளில் இப்படிப்பட்ட ஆவிகள் இருக்கும்.

ஒருசில மாந்திரீகத் தொழில் தெரிந்தவர்கள் மூலமாக பச்சைப் பானைகளில் அடைத்து இவற்றை ஆற்றங்கரை, குளக்கரை, கடற் கரை, வனங்களில் விட்டால் அந்த ஆவிகளுக்கும் விடுதலை. நமக்கு பெரும் புண்ணியம் தரும் செயலாகும்.




மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து புத்தகங்களையும் படித்து மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...

www.aanmeegamalar.com

# சிவத்தில் ஜீவமும், ஜீவனில் சிவமும் ஒன்றாக கலந்து இருப்பதே முக்தி

நமது பாரத திருநாட்டில் தோன்றிய தத்துவங்களும், சமயங்களும் இருவகையான முக்தி நிலையை பற்றி சிறப்பித்து பேசுகிறது எனலாம். பஞ்ச பூதங்களின் செயற்கையால் உருவான இந்த உடம்பு அழிந்த பிறகு, முக்தி என்பது பயனற்றது. உடம்பு, உடம்பாக உயிர் கொண்டு நடமாடும் போது, அடைய கூடிய முக்தியே சிறந்த முக்தி என்பது ஒருவகையாகும். உயிரோடு இருக்கும் போது, அடையும் முக்திக்கு ஜீவன் முக்தி என்று பெயர். அப்படி அடைந்த ஞானியை, ஜீவன் முக்தர் என்றும் அழைக்கிறார்கள். உடம்பை விட்டு உயிர் பிரிந்த பிறகு, ஆத்மா இறைவனோடு கலப்பதற்கு விதேக முக்தி என்பது பெயராகும். அதாவது, உடம்போடு பெற்றால் ஜீவன் முக்தி. உடம்பு இல்லாமல் பெற்றால் விதேக முக்தி என்று இரண்டு வகை முக்திகள் யோகிகளால் அடையாளம் காட்டப்படுகிறது. இந்த முக்திகளை பற்றி மிக ஆழமான இந்திய சிந்தனையை உணர்ந்து கொண்டால் இன்னும் தெளிவு நமக்கு ஏற்படும்.

பிறக்கின்ற போது, இறக்கின்ற தேதியோடு பிறக்கிறோம். ஒருநாள் இந்த உலகைவிட்டு, உறவுகளை விட்டு நமது உடம்பையே விட்டு சாகப்போகிறோம் என்ற எண்ணம் வருகின்ற போது, அச்சம் வருகிறது. ஆனால், உடம்பு மட்டும் தான் சாகப்போகிறதே தவிர, நமது ஆன்மா மரணமடைய போவதில்லை. அதற்கு மரணமே இல்லை என்ற இரகசியம் நம்மில் பலருக்கு தெரிவது கிடையாது. ஆத்மாவின் உண்மை இயல்பை அறிந்து கொள்ளுகிற போது, எமன் வருகின்ற நாளை எண்ணி கவலைப் படாமல் புதிய பயணத்தை துவங்க ஆனந்தமாக காத்திருப்போம். மரண பயம் இல்லாத இந்த நிலையை சதுர்மறை என்று அழைக்கப்படுகின்ற நமது நான்கு வேதங்கள், ஆத்ம விடுதலை என்று அழகாக அழைக்கிறது. இந்த ஆத்மா விடுதலையை இறைவழிபாடு வரம்பு கடந்து ஓடுகின்ற புலன்களை அடக்கி வாழுதல், மனதை ஒருமுகப்படுத்துதல் போன்றவற்றால் எளிதாக பெறலாம் என்று வேதங்கள் கூறுகின்றன.

ஆத்மாவை தீ சுடுவது இல்லை. நீர் ஈரப்படுத்துவதில்லை. ஆயுதங்கள் ஊனப்படுதுவது இல்லை. காரணம், ஆத்மாவிற்கு அழிவே இல்லை. ஆத்மா தற்காலிகமாக வாழுகின்ற இந்த உடல் மட்டும் தான் மரணத்தால் அழிந்து போகிறது. வாழுகிற வாழ்க்கையில், நாம் செய்த வினைப்பயனாக கிடைக்கின்ற பாவ புண்ணியங்களை அனுபவிப்பதற்கு ஆத்மா வேறொரு உடலை நாடி போகிறது. பற்றுகளை விட்டு விட்டால், ஆசைகளை துறந்துவிட்டால், செயல்களால் ஏற்படும் பலன்களை தியாகம் செய்து விட்டால், கர்ம வினைகள் அற்றுப் போய்விடுகின்றன.

இதனால், பிறப்பற்ற நிலை ஏற்படுகிறது. பொய்மையிலிருந்து உண்மைக்கு வருவது போல, இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வருவதை போல, இறப்பிலிருந்து இறவாமைக்கு வருவது தான் உண்மையான முக்தி நிலை என்று பல உபநிடங்கள் ஓங்கிய குரலில் உறுதியாக பேசுகின்றன.



ஜீவன் என்பது பல்லாயிரம் பிறவிகளை எடுத்து, இறுதியாக எடுத்திருக்கும் பிறவியே மனிதப்பிறவியாகும். மனிதனாக பிறந்திருப்பது பாவத்தின் சம்பளத்தால் அல்ல. அறிய தவத்தின் பலனாள் ஆகும். காரணம், தெய்வமாக இருந்தால் கூட அது மனிதனாக பிறந்தால் மட்டுமே முக்தி என்ற உயரிய நிலையை அடைய இயலும் கர்மா ஏற்படுத்திய தடைகளில் கட்டுப்பட்டு கிடக்கிற ஆத்மா ஜனனம், மனனம், மரணம் என்ற சக்கரத்திற்குள் அகப்பட்டு கொண்டு, வெளியே வரமுடியாமல் துடித்துக்கொண்டிருக்கிறது.

இந்த சக்கரத்தை உடைத்து விட்டால் கர்மாவை முற்றிலுமாக அழித்துவிட்டால் ஆத்மா, அளவிட முடியாத அறிவு, அளவிட முடியாத சக்தி, அளவிட முடியாத ஆனந்தம் போன்றவற்றை தருகின்ற முக்தி நிலையை கைவல்ய நிலையை அடையலாம் என்று ஜைன மதத்தை உருவாக்கிய மகாவீரர் கருத்துரைக்கிறார்.

முக்தி நிலை என்று யோகிகள் கூறுவதை,




ஆன்மிகமலர் மெயில் புக்

# மாற்றத்தை ஏற்படுத்தும் மந்திரக்கோலும் நமக்குள்ளே தான் மறைந்து கிடக்கிறது

சட்டையை மாற்றினால், சாப்பாட்டை மாற்றினால், பழகும் நண்பர்களை மாற்றினால் மாற்றம் வந்து விடுமா?.

செக்குமாடு மாதிரி சுற்றிக் கொண்டே இருக்கிறேன், பார்த்த முகத்தையே பார்க்க வேண்டி இருக்கிறது, பழகிய மனிதரிடமே பழக வேண்டி இருக்கிறது, நாளும் பொழுதும் ஒரே மாதிரி நகர்கிறதே தவிர வித்தியாசம் என்பதை காணமுடியவில்லை என்று தவிப்பவர் நம்மில் எத்தனை பேர்?

தொங்கிய முகம், சோர்ந்து போன கண்கள், உற்சாகத்தை பறிகொடுத்து விட்ட சொற்கள், நடையில் தளர்ச்சி,வயதுக்கு மீறிய முதுமை இதெல்லாம் ஏன்?

வாழ்கையை பற்றிய தவறான கணிப்புக்கள் நம்மிடம் இருக்கிறது, வெளியில் இருந்து மாற்றம் தேடி வரும் என்று கணக்கு போடுகிறோம்.கண்ணுக்கு நேராக தெரியும் பௌதீக பொருளால்தான் மாற்றத்தை கொண்டு வர முடியும் என நம்புகிறோம்.

உண்மையில் மாற்றம் வெளியில் இல்லை வெளியில் இருந்து வரவும் முடியாது.வருவதால் மாற்றத்தை தரவும் முடியாது. சிப்பிக்குள்ளே முத்து இருப்பது போல மாறுதல் என்பது நமக்குள்ளே இருக்கிறது. நம் மனதுக்குள்ளே மறைந்து கிடக்கிறது. ஆணி அடித்து பூட்டப்பட்டிருக்கும் நம் நம்பிக்கை என்னும் கதவை ஓங்கி தட்ட வேண்டும் தட்டினால்தான் மணிக் கதவு தாழ் திறக்கும்.

இறைவன் நாம் ஒடி விளையாட உலகம் என்னும் வண்ணப் பூஞ்சோலையை சமைத்துள்ளான். இங்கே இருப்பது ஒவ்வொன்றும் புத்துணர்ச்சி என்ற ஆடுகளமே! காலத்தை நீ பந்தாக கருதினால் காலத்தோடு சதுரங்கம் ஆடலாம், நீ உன்னை பந்தாக ஆக்கிக் கொண்டால் மைதானத்தில் உதைபடும் பொருளாவாய். உதைபட போகிறாயா? விளையாட போகிறாயா? என்பதை நீ தான் முடிவெடுக்க வேண்டும் என்று இறைவன் விரும்புகிறான். அவன் தனக்கு நிகராக மனிதனாகிய நம்மை படைத் திருக்கிறான். இறைவன் மனதிற்குள் மாய திரை போட்டு மறைந்திருப்பது போல, மாற்றத்தை ஏற்படுத்தும் மந்திரக்கோலும் நமக்குள்ளே தான் மறைந்து கிடக்கிறது பயன்படுத்தும் விதத்தில் பயன்படுத்தினால் வண்ணப் பசுஞ்சோலையை பரிசாக பெறலாம்..

யோகி ஸ்ரீ ராமானந்த குரு




கைவல்ய நிலை என்று மகாவீரர் சொன்னதை, நிர்வாண நிலை என்று புத்தர் கூறுகிறார். விளக்கில் உள்ள தீபம் ஏற்றப்படுவதற்கு முன்பு எங்கே இருந்ததோ அணைக்கப்பட்ட பிறகு எங்கே செல்கிறதோ, அந்த மஹா சூன்யத் தில் நிரந்தரமாக கலந்துவிடுவது தான் நிர்வாணம், முக்தி என்பதெல்லாம். முக்தி அடையாமல் அது இப்படித்தான் இருக்குமென்று கூறுவது வெறும் கற்பனை என்பதனால், புத்தர் அதைப் பற்றி அதிகமாக விளக்கம் தராமல் உலக துன்பங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதே நிர்வாணம் என்று பொட்டில் அறைந்தாற்போல் பதில் தருகிறார்.

பகவான் விஷ்ணுவின் அவதாரங்களில் ஒருவாறாக கபில முனி கருதப்படுகிறார். இந்த கபிலரால் உருவாக்கப்பட்டது சாங்கியம் என்ற மகாதத்துவம். தத்துவங்களில் நான் சாங்கியமாக இருக்கிறேன் என்று கிருஷ்ண பரமாத்மா கூட அதற்கு சிறப்பு தருகிறார்.

அப்படிபட்ட சாங்கியம் முக்தியை பற்றி மிக தெளி வான விளக்கம் தருகிறது. சித் மயமான ஆத்மா சித் இல்லாத பிரகிருதியை அதாவது, பொருளை மையமாக பிடித்துக் கொண்டு பொருள்தான் நிஜம் என்று மயங்கி கிடக்கிறது. பிரகிருதியிலிருந்துதன்னை விடுவித்துக் கொண்டு, தான் எல்லை இல்லாத சக்தியுடைய பரமாத்மாவியின் ஒரு அங்கம் என்று அனுபவப்பூர்வமாக உணரும் போது, அடையக்கூடிய சிம்மாசனமே முக்தி என்று சாங்கியம் முக்திக்கு தத்துவ ரீதியான விளக்கத்தை தந்து மகிழ்கிறது.

ஆதிசங்கரர் உருவாக்கிய அத்வைதமும், ஸ்ரீ ராமானுஜர் உருவாக்கிய விசிஷ்டாத்வைதமும், ஸ்ரீ மத்வர் உருவாக்கிய துவைதமும், சிவ னை வழிபடுகின்ற சைவமும், சக்தியை கொண்டாடும் சாக்தமும் முக்தி அடைவது தான் ஜீவன்களின் மிக முக்கிய பணி என்று அறுதியிட்டு கூறுகிறார்கள். வைதீகமான இந்து சமயப்பிரிவுகள் மட்டுமல்ல ஹிந்துமதமும், சரிபாதி இஸ்லாம் மதமும் கலந்து உருவான சீக்கியமும் கூட இறைவனோடு மனித ஆத்மாவை ஐக்கியப்படுத்துவதே வாழ்க்கை என்பதன் இறுதி குறிக்கோள். இந்த ஐக்கியத்தால் ஜீவன் அடைகின்ற ஒப்பில்லாத அனுபவம், குருபக்தியின் மூலம் கிடைக்கிறது. இறை ஐக்கியத்தில் சுகானுபவம் பெற்று, அந்த அனுபவத்தை பிறரும் அடையும் வண்ணம் செய்யவேண்டும் அப்படி செய்வதே முக்தியின் முழுமை நிலையாகும் என்று சீக்கியம் கூறுவது மிகச் சிறந்த மனிதாபிமானமிக்க கருத்தாகும்.

சமய பிரிவுகளுக்குள் முக்தியை பற்றி இத்தனை விதமான கருத்துக்களும், சிறப்புகளும் இருப்பதற்கு சித்தர்கள் முக்தியை பற்றி பகிரங்கமாக சொன்ன அனுபவங்களே காரணம் என்று கூறினால் அது மிகையாகாது.

இந்திய தத்துவங்கள் என்று எதை எடுத்தாலும், அவை அனைத்துமே சித்த தத்துவங்களில் ஆங்காங்கே விரவி கிடப்பதை காணலாம். சித்தர்கள் இயல்பாக மக்கள் மொழியில் கூறியதை தத்துவப்பிரிவுகள் இலக்கண மொழியில் சொல்கின்றன என்று சொன்னாலும் அதுவும் சரியாகத் தான் இருக்கும்.

உயிர் தங்கி இருக்கின்ற உடம்பும், உடம்பால் பெறுகின்ற உலகி யல் இன்பமும், கல்வியும், ஜீவன்களின் அனுபவமும் இறைவனை அடைவதற்கு பயன்பட வேண்டும். அதன் பெயர் தான் பிறப்பற்ற நிலை என்று திருமூலர் சொல்கிறார்.

அதாவது மாயா உலகத் திலிருந்து விடுபட்டு, உண்மையான சிவபோகதுக்குள் ஆத்மா அழுந்திவிட வேண்டும். சிவத்தில் ஜீவனும், ஜீவனில் சிவ மும் ஒன்றாக கலந்து இன்புற்று இருப்பதே உண்மையான முக்தி. பிறப்பறுப்பதும் பேரின்பம் அடைவதும், ஆன்ம பயணத்தின் இறுதி நிலை என்று கூறுகின்ற சித்தர்கள், அந்த முக்தி நிலையை அடைவதற்கு முன்பே நாம் சொன்னபடி யோக மார்க்கங்களை மட்டும் காட்டவில்லை. வேறு பல மார்க்கங்களையும் குறிப்பாக சிவ போகத்தை ஜீவன் சுலபமாக அடைவதற்கு தாந்திரீக மார்க்கங்களையும் கூறி இருக்கிறார்கள். அவர்கள் கூறிய இந்த மார்க்கத்தை அறியாமல், சித்தர்களின் முக்தி அனுபவத்தை முழுமையாக தெரிந்து கொள்ள இயலாது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# வேதத்திற்கு சமமான லலிதா சகஸ்ரநாமத்தின் சிறப்பும் பயனும்

அம்மன் வழிபாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம வழிபாடு, தேவியின் அனைத்துவித உயர்வினையும் மிக அழகாக கூறுவதாக அமைந்தது. தேவியின் புகழ்பாடும் இந்த வழிபாட்டை தொடர்ந்து கூறிவருபவர்களிடம் எந்தவித தீய சக்திகளும் அண்டாது. இவர்கள் செல்லும் இடத்தில் தீய சக்தி இருந்தாலும். அவர்களை அண்டாமல் ஒதுங்கியே நிற்கும்.

லலிதா சகஸ்ரநாமத்தில் என்ன விசேஷம் என்றால், ஒருமுறை கூறப்பட்ட நாமம் மற்றொருமுறை உபயோகப்படுத்தப் பட்டிருக்காது.

லலிதா சகஸ்ரநாமத்தில் மட்டும் தான் தேவி ஸ்வரூபம், தோன்றிய வரலாறு, அவளை வழிபட யந்திரம், மந்திர பரிவார தேவதைகளின் நிலை, வழிபாட்டு முறை, அவள் அருளால் பெறக்கூடிய மேன்மைகள் ஆகியவைகளை வாக்தேவதைகளே கூறுவதால், வேதத்திற்குச் சமமாகக் கூறப்படுகிறது.

“ஸ்ரீ மாதா” என்று அழைக்கப்படும் ஸ்ரீ லலிதையானவள், எப்படித் தோன்றினாள்?

அசுரர்களின் இடையூறுகளையும், இன்னல்களையும் தாங்கமுடியாமல், தேவர்கள், யாகம் வளர்த்து, அம்பாளை வேண்டி நின்றனர். அவளை வரவழைக்க, தங்களின் தேகத்தையே யாகத்தில் அர்ப்பணிக்கத் தயாரானார்கள். அப்பொழுது ஞானமாகிய குண்டத்திலிருந்து ஆதிசக்தியானவள் தோன்றினாள்.

சக்திகளுக்குள் ஸ்ரீ லலிதா போல் வேறெந்த சக்தியும் இல்லை என்று கூறுவார்கள். மந்திரங்களில், ஸ்ரீ வித்யையைப்போல், நகரங்களில் ஸ்ரீ புரம் போல், ஸ்ரீ வித்யை உபாசகர்களில் ஸ்ரீ சிவனைப்போல், சகஸ்நாமங்களில் லலிதா சகஸ்ரநாமம் போல் என்று மேன்மை வாய்ந்ததாகப் போற்றப்படுகிறது.

நமது முதுகுத் தண்டின் அடியில், கிண்ணம் போன்ற அமைப்பு உள்ளது. இது தான் ‘மூலாதாரம்‘ என்று கூறப்படுகிறது.

நாம் மனதை ஒருநிலைப்படுத்தி, சகஸ்ரநாமம் சொல்லும் பொழுது, நாபிக்கடியில் இருக்கும் சக்தியை, மந்திரத்தின் அழுத்தம் சீண்டி விடுகிறது. அந்த சக்தியானது, மேலே எழும்பி, சுவாதிஷ்டானம், மணி பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞ்யை, பிறகு சகஸ்ராரம் என்கிற கடைசி நிலையை வந்தடைகிறது.

சகஸ்ராரம் என்னும் சிகரத்தில்தான் ஸ்ரீ சிவன் இருப்பதாகக் கூறப்படுகிறது. சகஸ்ராரத்தில், அதாவது சிகரத்தில், கவிழ்ந்த நிலையில் உள்ள கிண்ணத்தில் அமிழ்தம் உள்ளது. கீழிருந்து எழும்பிய சக்தி, சிகரத்தில் உள்ள சிவனோடு சேரும் பொழுது, கவிழ்ந்த நிலையில் உள்ள கிண்ணத்திலிருந்து, அமிழ்தம் கொட்டுவதாக அறியப்படுகிறது. அப்பொழுது, அவள் சிவசக்தி ஸ்வரூபிணியாகவே நமக்குக் காட்சி கொடுப்பாள் என்று கூறப்படுகிறது.

லலிதா சகஸ்ரநாமம் படிப்பதால், கங்கை போன்ற புண்ணிய நதிகளில் முறைப்படி நீராடுதல், அவிலிங்க க்ஷேத்திரத்தில், கோடி லிங்கங்கள் பிரதிஷ்டை செய்தல், அஸ்வமேத யாகம் செய்தல், அன்னதானம் செய்தல், இவையெல்லாவற்றையும் விட மேன்மையானது என்று கூறப்படுகிறது.

லலிதா சகஸ்ரநாமத்தை சிரத்தையுடன் கூறவேண்டும் விழிப்பு நிலை, உறக்க நிலை இரண்டிலுமே நம்முடன் தேவி எப்பொழுதுமே இருக்கிறாள். வாக்தேவிகள் மொழிய, ஸ்ரீ ஹயக்ரீவரால் தெளியப்படுத்தப்பட்ட ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தினை நாம் அனுதினமும் கூறிவந்தால் நிறைவான வாழ்வினைப் பெறலாம்.

தேவிக்கான உபாசனை, நவராத்திரி போன்ற தேவிக்குரிய சிறப்பு நாட்களில் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தினைகூறி வந்தால் பலன் இரட்டிப்பாகும்என்றும், கூட்டுவழிபாட்டில் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தினை கூறும்போது வழிபாட்டிற்கான நோக்கம் எளிதாக நிறைவேறு என்றும் கூறப்படுகிறது.



# நமது கைகளில் உள்ள தெய்வீக சக்தி

## காலையில் எழுந்ததும் கரதரிசனம் செய்வதன் அவசியம்

அதிகாலையில் படுக்கையை விட்டு எழுவதற்கு முன்னர் கரதரிசனம் செய்ய வேண்டும், அதாவது இரண்டு கைகளையும் ஒன்றாக சேர்த்து உள்ளங்கைகளைப் பார்த்துக் கொண்டே மனதை ஒருமுகப்படுத்தி கீழ் வரும் ஸ்லோகத்தை உச்சரிக்க வேண்டும்.

கராக்ரே வஸதே லக்ஷ்மீ: கரமத்யே ஸரஸ்வதி |
கரமூலே து கோவிந்த: ப்ரபாதே கரதர்சனம் ||

அர்த்தம் : கைகளின் நுனி பாகத்தில் லக்ஷ்மி வாஸம் செய்கிறாள். கைகளின் மத்ய பாகத்தில் ஸரஸ்வதி வஸிக்கிறாள் மற்றும் கைகளின் அடி பாகத்தில் கோவிந்தன் உள்ளான். அதனால்




விடியற்காலையில் எழுந்தவுடன் உள்ளங் கைகளை தரிசனம் செய்ய வேண்டும்.

(இன்னொரு அர்த்தம் : உள்ளங்கைகளின் அடிப்பாகத்தில் ப்ரம்மா உள்ளார்.)

ஸ்லோகத்தின் உள்ளர்த்தம்

### உள்ளர்த்தம் 1

அ. **லக்ஷ்மியின் மஹத்துவம்:** கைகளின் நுனி பாகத்தில் லக்ஷ்மி வாஸம் செய்கிறாள். அதனால் வெளிப்புற உலகரீதியான பகுதி லக்ஷ்மி ரூபமாக உள்ளது. அதாவது உலகியலுக்கு (செல்வம் அல்ல, மாறாக பஞ்சமஹாபூதம், அன்னம், வஸ்திரம் போன்றவை) லக்ஷ்மி மிகவும் அவசியம்.

ஆ. **ஸரஸ்வதியின் மஹத்துவம்:** செல்வம் மற்றும் லக்ஷ்மியை அடையும்போது ஞானமும் விவேகமும் இல்லாவிட்டால் அந்த லக்ஷ்மியே அலக்ஷ்மியாக மாறி நம் அழிவிற்கு காரணமாவாள். அதனால் ஸரஸ்வதி மிகவும் அவசியம்.

இ. **ஸர்வம் கோவிந்த மயம்:** மத்யபாகத்தில் ஸரஸ்வதியாகவும் நுனி பாகத்தில் லக்ஷ்மியாகவும் வீற்றிருப்பவன் கோவிந்தனே. மஹான் ஞானேச்வர் மஹராஜ் அம்ருதானுபவத்தில் சிவபார்வதி ஸ்தவனில் கூறுகிறார், அடி, மத்ய மற்றும் நுனி மூன்றும் வெவ்வேறாகத் தெரிந்தாலும் கோவிந்தனே விசேஷ ரூபத்தில் அங்கு செயல்படுகிறார். பெரும்பாலும் எல்லா காரியங்களுமே விரல்களின் நுனி பாகத்தால் செய்யப்படுகிறது. அதனால் அங்கு லக்ஷ்மி வாஸம் செய்கிறாள். ஆனால் அனுபவத்தின் மூலம் பெருகும் ஞான ப்ரவாஹம் அந்த விரல்களுக்கு செல் லாவிட்டால் கைகளால் எந்தக் காரியமும் செய்ய முடியாது. ப.பூ. பரசுராம் பாண்டே மஹராஜ்

### உள்ளர்த்தம் 2

அ. செல்வச் செழிப்பும், மனதை சுண்டியிழுத்து மோஹத்தில் ஆட்படுத்தும் வெளிப்பட்ட மாயா ஸ்வரூபமான லக்ஷ்மியும் மூல வெளிப்படாத ஸ்வரூபமான கோவிந்தனும் வெவ்வேறானவர் அல்ல; மாறாக இருவரும் ஒன்றே. இந்த ஞானத்தை வழங்குபவளே கல்யாணமயி, ஞானதாயினியான ஸரஸ்வதி.

ஆ. லக்ஷ்மி கர்மாவையும், ஸரஸ்வதி ஞானத்தையும் கோவிந்தன் பக்தியையும் குறிக்கின்றனர். இம்மூன்றையும் ஒருங்கிணைப்பதன் மூலமே ஈச்வரனோடு ஒன்ற முடியும்.

இ. ஞானத்தோடு கூடிய பக்திபூர்வமான கர்மாக் களை செய்வதன் மூலமே ப்ரவ்ருத்தி மார்க் கத்தையும் நிவ்ருத்தி மார்க்கத்தையும் ஸமநிலையில் கொண்டு செல்ல முடியும். இதன் மூலம் சாதுர்வர்ணாஸ்ரம தர்மப்படி வாழ்க்கையை மிக நேர்த்தியாகவும் அழகாகவும் கொண்டு செலுத்தி இறுதியில் ஈச்வரனை அடைய முடியும்.

ஈ. இத்தகைய ஜீவன் நிஷ்காம கர்மயோகியாகிறான். (கர்மயோகம் பயிலும் தன்னல மற்ற ஜீவன்)

குருக்ருபாயோகப்படியான ஸாதனைஎன்ற ஸாதனா மார்க்கத்தில் இவ்விஷயம் சொல்லப் பட்டிருக்கிறது. அதனால் இந்த வழிப்படி ஸாதனை செய்பவருக்கு, மற்ற வழிகளில் செய் பவரைக் காட்டிலும் விரைவாக ஞானம் கிடைக் கிறது. அத்தகைய ஜீவனுக்கு விரைவான ஆன் மீக முன்னேற்றம் ஏற்படுகிறது. (ஸனாதன் ஸன்ஸ்தாவின் குருக்ருபாயோகப்படியான ஸாதனை இதனைக் கற்றுத் தருகிறது. இதைப் பற்றிய மேலும் விவரங்கள் ஸனாதனின் க்ரந்தத் தொகுப்பான குருக்ருபாயோகப்படியான ஸாதனையில் இடம் பெற்றுள்ளது.)

www.aanmeegamalar.com



**ஸுஷும்னா நாடி செயல்பட ஆரம்பிக்கிறது**

கைகளை ஒன்றாக குவிக்கும் இந்த ப்ரம்ம முத்திரையால் உடலின் ஸுஷும்னா நாடி செயல்பட்டு, இரவு முழுவதும் தங்கியதால் உடலில் ஏற்பட்ட தமோகுணத் தன்மையை நீக்குகிறது: கைகளைக் குவித்து அதில் மனதைப் பதிய வைத்து 'கராக்ரே வஸதே லக்ஷ்மி... 'என்ற ஸ்லோகத்தை உச்சரிப்பதால் ப்ரம்மாண்டத்திலுள்ள தெய்வீக அதிர்வலைகள் கைகளை நோக்கி ஆகர்ஷிக்கப்படுகின்றன. இந்த அதிர்வலைகள் கைகளில் திரள்கின்றன. குவிந்த கைகளிலுள்ள வெற்றிடத்தில் ஆகாய தத்துவத்தை, வ்யாபகத்தன்மையை க்ரஹித்து அங்கேயே நிறையும்படி செய்கின்றன. கைகளைக் குவிப்பதால் ஏற்படும் ப்ரம்மமுத்திரையின் மூலம் ஸுஷும்னா நாடி செயல்பட ஆரம்பிக்கிறது. இந்த நாடி ஜீவனின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவுகிறது. இரவு முழுவதும் தூங்கியதால் உடலில் தமோகுணம் சேர்ந்திருந்தால், செயல்பாட்டிலிருக்கும் ஸுஷும்னா நாடி அதை நீக்குவதில் உதவுகிறது

**மற்ற பயன்கள்**

அ. ஜீவன் உள்முகமாதல், பகவானோடு உரையாடுதல் மற்றும் ஜீவனின் கஷ்டம் தரும் சக்தி ஆவரணம் தூர விலகுதல் : இரவு முழுவதும் உறங்குவதால் ஜீவனின் உடலில் அடர்த்தியான தமோகுண அதிர்வலைகள் நிர்மாணமாகின்றன. அதிகாலை எழுந்து கரதரிசனம் செய்து, 'கராக்ரே வஸதே லக்ஷ்மி...' ஸ்லோகத்தைச் சொல்வதால் ஜீவன் உள்முகமாகிறது. அதனால் அவரின் உடலிலுள்ள கஷ்டம் தரும் சக்தி ஆவரணம் தூர விலகி, பகவானோடு உரையாடுவது ஆரம்பமாகிறது. அன்று முழுவதும் அதே நிலையில் ஜீவனால் இருக்க முடிகிறது.

ஆ. அதிகாலை எழுந்து கரதரிசனம் செய்து, 'கராக்ரே வஸதே லக்ஷ்மி...' ஸ்லோகத்தை சொல்வது என்பது நமக்குள் பகவானை தரிசிப்பதாகும் : ஹிந்து தர்மத்தில் 'அயம் ஆத்மா ப்ரம்ம:' என்பதன் மூலம் ஆத்மாவே ப்ரம்மம் என்பது கற்றுத் தரப்படுகிறது. 'கராக்ரே வஸதே லக்ஷ்மி..' என்ற ஸ்லோகம் இதற்கு உதாரணமாக விளங்குகிறது. அதனால் அதிகாலை எழுந்து கரதரிசனம் செய்து ஸ்லோகம் சொல்வதன் மூலம் நமக்குள்ளேயே ஈச்வர தரிசனத்தைப் பெற முடிகிறது. ஹிந்து தர்மம் வெளித் தூய்மையைக் காட்டிலும் ஆழ்மனத் தூய்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

இ. நம்மையறியாமல் நாம் அயோக்ய கர்மாக்களை செய்ய முற்படும்போது நம் ஆழ்மனம் அதை உணர்வித்து செய்யாமல் தடுக்கிறது : மனிதனின் கைகள் மூலமாக அநேக காரியங்கள் தினமும் நடக்கின்றன. இந்த யோக்ய அல்லது அயோக்ய கர்மாக்கள் ஜீவனின் பாவபுண்ணியங்களை நிர்ணயிக்கின்றன. ஜீவன் அதிகாலை எழுந்து கரதரிசனம் செய்து, 'கராக்ரே வஸதே லக்ஷ்மி..' ஸ்லோகத்தை சொல்வதால் தன்னையறியாமல் அயோக்ய கர்மாக்களைத் தான் செய்யும்போது ஆழ்மனம் அதை உணர்வித்து செய்யாமல் தடுக்கிறது.

ஈ. ஜீவனுள் இருக்கும் ஆன்மீக உணர்விற்கேற்ப கரங்களின் நுனிபாகத்தில் லக்ஷ்மி தத்துவமும் மத்ய பாகத்தில் ஸரஸ்வதி தத்துவமும் அடி பாகத்தில் கோவிந்த தத்துவமும் ஆகர்ஷிக்கப்படுகிறது.

உ. இந்த ஸ்லோகம் ஸம்ஸ்க்ருத மொழியில் இருப்பதால், தேவமொழியான ஸம்ஸ்க்ருதத்தின் சைதன்யமும் அந்த ஜீவனுக்கு கிடைக்கிறது.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு : 09380949626



மின்னூல் வடிவத்தில்
ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
www.aanmeegamalar.com
MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...
aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை
உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.